வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

ஈழநாடு

Eelanadu

விலை ரூ. 20/=

28.10.2020 புதன்கிழமை

## மேலும் சில பிரதேசங்களுக்கு நேற்று முதல் ஊரடங்கு உத்தரவு

கொழும்பு, ஒக்.28

மொரட்டுவை, பாணந்துறை, ஹோமாகமை பொலிஸ் பிரிவுகளுக்கு உடன் அமுலுக்கு வரும் வகையில் மறு அறிவித்தல் வரை தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா நேற்று இரவு இந்த அறிவித்தலை விடுத்துள்ளார். (எ)

# ஒரே நாளில் மூன்று பேர் கொரோனாவால் மரணம்

## நிலைமை மேலும் மோசமடைகிறது



கொழும்பு, ஒக் 28

இலங்கையில் ஒரே நாளில் மூவர் கொரோனா வைரஸ் தாக்கத்துக்கு உள்ளாகிப் பலியானமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் தொற்று வேகமாகப் பரவி வரும் நிலையில் இறப்பு எண்ணிக்கையும் அதிகரித்துச் செல்கிறது.

02



## இலங்கை வந்தார் மைக் பொம்பியோ

கொழும்பு,ஒக்.28

அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியோ நேற்று இரவு இலங்கையை வந்தடைந்தார்.

ஆசியாவின் நான்கு நாடுகளுக்கு உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்

02

## குருநகர், பாசையூர் முற்றாக முடக்கம்!

### வெளியாட்கள் செல்லத் தடை

யாழ்ப்பாணம், ஒக் 29

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட குருநகர், பாசையூர் ஆகிய பகுதிகள் நேற்று முதல் முடக்கப்பட்டுள்ளன.

குருநகரிலுள்ள தனியார் கடலுணவு நிறுவனத்தில் பணியாற்றும் இரண்டு பேருக்கு நேற்று முன்தினம் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்

02

## நேற்று மட்டும் 500 தொற்றாளர்

கொழும்பு,ஒக்.27

நாட்டில் நேற்று மட்டும் 500 கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்று இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர

02

## வளங்களை கொள்ளையடிக்க இலங்கை வந்தார் பொம்பியோ

### எதிர்க்கட்சி குற்றச்சாட்டு



கொழும்பு, ஒக்.28

அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியோ, இலங்கைக்கு விஜயம் செய்திருப்பது நாட்டின் வளங்களைக் கொள்ளையடிக்கவே என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் குற்றம்சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்

02

## இரண்டாம் அலை வீரியம் அதிகம்!

### தொற்றுநோய் தடுப்பு பிரிவு அறிவுறுத்து

கொழும்பு, ஒக்.28

நாட்டில் இரண்டாம் அலையாக உருவாகியுள்ள கொரோனா வைரஸ் தொற்றின் வீரியம் அதிகம் என்பதால் மிக வேகமாக சமூகத்தில் பரவும் என தொற்றுநோய் தடுப்புப் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர எச்சரிக்கை விடுத்துள்

02

## கொரோனாவைக் கட்டுப்படுத்தும் செயல்பாடுகளில் அரசுக்கு வெற்றி

### இலங்கைக்கு உலக வங்கி பாராட்டு



கொழும்பு,ஒக்.28

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த இலங்கை முன்னெடுத்த நடவடிக்கைகள் வெற்றிகரமானவையாக அமைந்துள்ளன. அதற்கு அவசியமான அனைத்து ஒத்துழைப்புக்களையும் வழங்கத் தயாராக இருக்கின்றோம் என உலக வங்கியின் தெற்காசிய பிராந்தியத்துக்கான பணிப்பாளர் பரிஸ் ஹடாட் ஸர்வோஸ் தெரிவித்தார்.

சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சியுடன் நேற்று இடம்பெற்ற சந்திப்பின்போது அவர் இவ்வாறு குறிப்பிட்

02



## அச்சுவேலியில் விபத்து: சாரதி ஸ்தலத்தில் பலி!

### ஒருவர் படுகாயம்

அச்சுவேலி, ஒக். 28

வேகக் கட்டுப்பாட்டை இழந்த கார் மின்கம்பத்துடன் மோதியதில் அதன் சாரதி ஸ்தலத்திலேயே உயிரிழந்தார். அவருடன் பயணித்தவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்து நேற்று பிற்பகல் 3.30

02

## கத்திமுனையில் அச்சுறுத்தி நகைகள், பணம் கொள்ளை!

### நேற்று அதிகாலை வடமராட்சியில் துணிகரம்

வடமராட்சி, ஒக். 28

அதிகாலை வேளை வீட்டுக்குள் புகுந்த கொள்ளையர் குழு கத்திமுனையில் குடும்பத்தவர்களை அச்சுறுத்தி பதினான்கரை பவுண் நகை, ஒன்றரை இலட்சம் ரூபா பணம் என்பவற்றை கொள்ளையிட்டு சென்றுள்ளது.

இந்தத் துணிகர சம்பவம் நேற்று

02

ஈழநாடு

Online

சம்பவங்கள், செய்திகள் உடனுக்குடன் அறிந்துகொள்ள...

www.eelanadu.lk

### அச்சுவேலியில்....

மணியளவில் இராசபாதை வீதி, அச்சுவேலியில் இடம்பெற்றது.

இதில், வசாவிளானை சேர்ந்த தன பாலசிங்கம் லக்ஷயதீபன் (வயது 31) என்பவர் உயிரிழந்தார். அவருடன் பயணித்த சிவசரவணன் சதீஸ் (வயது 22) என்பவர் படுகாயமடைந்தார்.

விபத்துக் குறித்து மேலும் அறியவருவதாவது:

இராசபாதை வீதியில் பயணித்த கார் வேகக் கட்டுப்பாட்டை இழந்து மின் கம்பத்துடன் மோதியது. விபத்தில் இருவரும் காரினுள் சிக்கிக் கொண்ட நிலையில் சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இருவரையும் மீட்ட அம்புலன்ஸ் அவர்களை அச்சுவேலி மருத்துவமனையில் சேர்ப்பித்தது. காயமடைந்தவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

அச்சுவேலி வைத்தியசாலையில் வைக்கப்பட்ட சடலம் பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ)

### இரண்டாம்....

ளார். கொரோனா வைரஸ் சமூகப் பரவலாக மாற்றமடைந்துள்ளது. ஆனால், அரச தரப்பு தொடர்ந்து உண்மைகளை மறைத்து வருகிறது என்று விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில் நாட்டின் நிலைமை தொடர்பில் தெளிவுபடுத்துகையில் அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

நாட்டில் அதிகளவில் வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுவதனால் அது சமூகப் பரவல் எனக் கருத வேண்டாம். இது அனைத்துமே பரந்த கொத்தணியாகக் கண்டறியப்பட்டுள்ளது. நாட்டில் இதுவரை மினுவாங்கொடை கொத்தணியே பெரிய கொத்தணியாக அடையாளம் காணப்பட்டுள்ளது, அதன் அடுத்த உப கொத்தணியாக பேலியகொடை கொத்தணியை அவதானிக்கின்றோம். எனவே அனைத்துமே ஒரே தொடர்பைக் கொண்டதாகும். எனினும் பரிசோதனைகள் துரிதமாக முன்னெடுக்கப்படுகின்றன. வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகளைக் கையாண்டு வருகின்றோம்.

கொத்தணியாக வைரஸ் பரவல் அடையாளம் காணப்பட்டாலும் சமூகப் பரவலாகும் நிலைமை உள்ளது, அதற்கு மக்களின் செயல்பாடுகள் முக்கிய காரணம். சமூகத்தில் மக்களின் செயல்பாடுகள் முழுமையாக சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றும் விதமாக அமைய வேண்டும். ஒன்று கூடுவது, பொது நிகழ்வுகளை நடத்துவது என அனைத்துமே தவிர்க்கப்பட வேண்டும்.

மக்கள் மிகுந்த அவதானமாக இல்லாது போனால் சமூகப் பரவல் அதிகரிக்கும். அதேபோன்று இரண்டாம் அலையின் தாக்கம் அதிகமாகும். இந்த வைரஸ் செயல்படும் விதம் மாறுபட்டதாகும். விரைந்து பரவும் தன்மை கொண்டுள்ளது.

எனவே தான் அதிகளவில் வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர். இன்று நாடளாவிய ரீதியில் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் உள்ளனர். இவர்கள் மூலமாக கொரோனா வைரஸ் சமூகப் பரவலாக மாறும் அச்சுறுத்தல் உள்ளது.

எனினும் நிலைமைகளைக் கட்டுப்படுத்தும் வல்லமையில் நாம் உள்ளோம். இருப்பினும் மக்கள் பொது நிகழ்வுகளைத் தவிர்த்துக்கொள்ளுங்கள், அவசியமான நிகழ்வுகள் என்றால் குறைந்த நபர்களுடன் நிகழ்வுகளை நடத்த முயற்சிக்க வேண்டும். ஏனென்றால் அதிக கூட்டமான, சன நெரிசலான இடங்கள் என்றால் வைரஸ் மீண்டும் பரவும் வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன-என்றார். (அ-எ)

### குருநகர்....

தப்பட்டுள்ளது. பேலியகொடை மீன் சந்தையுடன் தொடர்புடைய இவர்கள் கடந்த வாரமே அங்கிருந்து குருநகர் வந்திருந்தனர். இதையடுத்து சன நெருக்கம் அதிகமுள்ள குருநகர் பகுதியில் ஏனையவர்களுக்கும் கொரோனாத் தொற்றுப் பரவுவதைத் தடுப்பதற்காக அப்பகுதிகளைச் சாராதவர்கள் மற்றும் வெளியாட்கள் உட்செல்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

முடக்கப்பட்டுள்ள பகுதிகளில் நான்கு இடங்களில் வீதித் தடைகள் அமைக்கப்பட்டுள்ளன. பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் ஆகியோர் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

### கத்திமுனையில்....

அதிகாலை 4 மணியளவில் வடமராட்சி - கரணவாய் மேற்கு பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது:

அதிகாலை வேளை வீட்டுக்குள் புகுந்த ஐந்து பேர் கொண்ட கும்பல் குடும்ப அங்கத்தவர்களை கத்தி முனையில் அச்சுறுத்தி வீட்டில் இருந்த பணம் நகை என்பவற்றைக் கொள்ளையிட்டுச் சென்றது.

இந்தச் சம்பவம் குறித்து நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ - 2)

### கொரோனாவைக்....

டார்.

உலகின் ஏனைய நாடுகள் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதில் தடுமாற்றத்தை எதிர்கொண்டுள்ள வேளையில், இலங்கையின் சுகாதாரப் பிரிவு வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த வெற்றிகரமான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவது பாராட்டுக்குரிய விடயம் என பரிஸ் ஹடாட் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை நாட்டில் கொரோனா வைரஸ் பரவ ஆரம்பித்தபோது உலக வங்கியால் வழங்கப்பட்ட உதவிகளுக்கு சுகாதார அமைச்சர் தனது நன்றியை வெளிப்படுத்தினார். (அ-எ)

### வளங்களை....

திப்பின்போது அவர் இவ்வாறு குற்றம்சாட்டினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாற்:

அமெரிக்காவுடனான மிலேனியம் சவால்கள் உடன்படிக்கையின் இறுதி அம்சங்கள் தொடர்பில் இறுதி முடிவுகளை எடுப்பதற்காகவே மைக் பொம்பியோ இலங்கைக்கு வந்துள்ளார்.

இதேவேளை முன்னர் சோபா உடன்படிக்கையை எதிர்த்த அரசாங்கம் தற்போது மிலேனியம் சவால்கள் உடன்படிக்கையை ஆதரிக்கின்றது எனவும் அவர் குறிப்பிட்டார். (எ)

### ஒரே நாளில்....

கம்பஹா மாவட்டம், ஜா - எல பிரதேசத்தைச் சேர்ந்த 41 வயது ஆண் ஒருவர் கொழும்பு தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்றுக் காலை உயிரிழந்தார்.

இதேவேளை, கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இருவர் நேற்று பகல் உயிரிழந்தனர்.

கொழும்பு - வாழைத்தோட்டத்தைச் சேர்ந்த 19 வயது இளைஞரும், கொழும்பு - கொம்பனித்தெருவைச் 65 வயதுடைய பெண்ணும்உயிரிழந்தனர்.

இந்தநிலையில், இலங்கையில் கொரோனாத் தொற்றால் நேற்று மட்டும் மூவர் உயிரிழந்தனர். இதனால் பலியானவர்களின் மொத்த எண்ணிக்கை 19ஆக உயர்ந்துள்ளது.

# வீட்டில் தனிமைப்படுத்தல் எந்தச் சிக்கலும் இல்லை

## அஜித் ரோஹண விளக்கம்

கொழும்பு,ஒக்.28



கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டோருடன் தொடர்புகளைப் பேணிய முதலாவது தொடர்பாளர்களை வீடுகளிலேயே தனிமைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதில் எந்தச் சிக்கலும் கிடையாது என பிரதி பொலிஸ்மா அதிபர் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று மாலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களைக் கண்காணிப்பது சுகாதாரத்துறையினருக்கும் பொலிஸாருக்கும் புதிய விடயமல்ல. சுமார் 35 ஆயிரம் பேர் வரை அவரவர் வீடுகளிலேயே சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரும் தொடர்ச்சியாகக் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர். மார்ச் மாதம் தொடக்கம் தற்போது வரை ஒரு இலட்சத்து 85 ஆயிரத்திற்கும் அதிகமானோர் வெவ்வேறு சந்தர்ப்பங்களிலும் தனிமைப்படுத்தப்பட்டனர்.

தனிமைப்படுத்தப்பட்ட இடங்களில் அதற்கான உத்தியோகபூர்வ அறிவித்தல் சுகாதாரத்துறையினரால் ஒட்டப்படும். அந்த அறிவித்தல் ஒட்டப்பட்டதன் பின்னர் ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் நியமிக்கப்பட்டுள்ள மக்கள் பொலிஸ் அதிகாரிகள் மூலம் இந்த கண்காணிப்பு சேவைகளைப் பெற்றுக் கொள்ள எதிர்பார்த்துள்ளோம். இந்த நடவடிக்கைக்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்குவதோடு சட்டத்திற்கேற்ப அனைவரும் செயல்படுவார்களாயின் வீடுகளிலேயே தனிமைப்படுத்தல் பிரச்னையாகாது-என்றார். (எ)

## பி.சி.ஆர். முடிவுகள் தாமதம்

# தொற்றாளர் எண்ணிக்கை வெளிவருவதில் சிக்கல்

கொழ்ழும்பு, ஒக் 28

இலங்கையில் கடந்த சில நாட்களாகத் தினந்தோறும் ஒன்பதாயிரம் வரையில் சராசரியாக பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் அந்தளவு தொகையைக் கையாள முடியாது ஆய்வுகூடங்கள் திணறுவதால் முடிவுகள் வெளிவருவதில் தாமதங்கள் நிலவுகின்றன என்று நம்பத்தகுந்த வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

ஆய்வுகூடங்களில் ஒரு நாளில் இத்தனை பி.சி.ஆர். பரிசோதனைதான் செய்யமுடியும் என்ற வரையறை இருப்பதால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனை முடிகள் வெளிவருவதில் தாமதம் காணப்படுகின்றது எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்தத் தகவலை உறுதிப்படுத்தும் வகையில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் சிரேஷ்ட அங்கத்தவர் வைத்தியர் ரட்ணசிங்கம் தணிகைவாசன் சர்வதேச தமிழ் ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்டுள்ளார்.

### இலங்கை....

பியோ மற்றும் அமெரிக்கப் பாதுகாப்புச் செயலாளர் மார்க் டீ எஸ்பர் ஆகியோர் உள்ளிட்ட 36 பேர் கொண்ட குழுவினர் நேற்று முன்தினம் இந்தியாவை வந்தடைந்த நிலையில் நேற்று இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ளனர்.

நேற்று இரவு 7.30 மணியளவில் அமெரிக்கக் குழுவினர் கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவின் அழைப்பின் பேரில் இலங்கை வந்துள்ள மைக் பொம்பியோ இந்த விஜயத்தின்போது, இரு நாடுகளுக்கும் இடையிலான பன்முக ஈடுபாடு தொடர்பில் இலங்கை அரசியல் தலைவர்களுடன் உத்தியோகபூர்வ கலந்துரையாடல்களை மேற்கொள்ளவுள்ளார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் இன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்திக்கவுள்ளார். வெளிவிகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தனவை வெளிவிவகார அமைச்சில் சந்திக்கவுள்ளதுடன் அவருடன் இணைந்து ஊடகவியலாளர் சந்திப்பிலும் கலந்து கொள்வார்.

இதேவேளை, 2019 ஆம் ஆண்டு (ஏப்ரல் 21) உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இலங்கையில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அஞ்சலி செலுத்த கொழும்பு, கொச்சிக்கடை தேவாலயத்துக்கும் அவர் செல்லவுள்ளார்.

இந்நிலையில் மைக் பொம்பியோ இன்று மதியம் இலங்கையிலிருந்து மாலைதீவுக்கு தனது விஜயத்தை தொடரவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஆட்சிக்காலத்தில் இலங்கைக்கு விஜயம் செய்த மிக உயர்ந்த அமெரிக்கப் பிரமுகர் இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியோ என்பது குறிப்பிடத்தக்கது. (அ-எ)

### நேற்று மட்டும்....

சில்வா தெரிவித்துள்ளார்.

இதேவேளை நேற்று மாலை 6 மணிக்கும் இரவு 10 மணிக்கும் இடைப்பட்ட நேரத்தில் மட்டும் நாட்டில் 164 கொரோனா தொற்றாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர்.

இதில் 08 பேர் தனிமைப்படுத்தல் நிலையங்களிலிருந்தும், கொரோனா தொற்றாளர்களுடன் நெருங்கிப் பழகிய 156 பேரும் இவ்வாறு இனங்காணப்பட்டுள்ளனர்.

அதன்படி நேற்று மாத்திரம் 500 கொரோனா தொற்றாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர்-என்றார். (அ-எ)

ஈழநாடு
Eelanadu
28.10.2020 புதன்கிழமை
சார்வாரி, ஐப்பசி 13

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

gmail:- eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# பொம்பியோவின் விஜயம்

அமெரிக்க இராஜாங்கச் செயலர் மைக் பொம்பியோவின் விஜயம் தொடர்பில் பலவாறான அரசியல் அபிப்பிராயங்கள் உண்டு. இந்த நேரத்தில் ஓர் அமெரிக்க அதியுயர் அரசியல் பிரமுகர் ஒருவர் எதற்காக கொழும்பிற்கு விஜயம் செய்திருக்கின்றார்? இது தொடர்பில் வழமையாக சந்தேகங்களை எழும்பும் ஜே.வி.பி. கட்சி, பொம்பியோவின் விஜயத்தை எதிர்த்திருக்கின்றது. அமெரிக்க அரசியல் அதிகார நிலையைப் பொறுத்தவரையில் வெளிவிவகார விடயங்களை கையாள்வதில், இவர் அமெரிக்க ஜனாதிபதிக்கு அடுத்த நிலையில் கணிக்கப்படும் ஒருவராவார். இவ்வாறான ஒருவர் சாதாரணமாக ஒரு நாட்டுக்கு விஜயம் செய்யமாட்டார்.

இலங்கையின் அரசியல் வரலாற்றைப் பொறுத்தவரையில் அமெரிக்க இராஜாங்கச் செயலர்கள் இலங்கைக்கு விஜயம் செய்திருப்பது மிகவும் அரிதாகவே நடந்திருக்கின்றது. 1972இல், அப்போதைய அமெரிக்க இராஜாங்கச் செயலர் வில்லியம் றொஜெர்ஸ் (**William Pierce Rogers**) இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார். அதன் பின்னர் சுனாமி அனர்த்தத்தைத் தொடர்ந்து இந்தியாவிற்கு விஜயம் செய்திருந்த அப்போதைய இராஜாங்கச் செயலர் கொலின் பவல் கொழும்பிற்கு விஜயம் செய்திருந்தார். ஆனால், அந்த விஜயம் அரசியல் ரீதியில் முக்கியமான ஒன்றாகக் கருதப்படவில்லை.

இந்த அடிப்படையில் நோக்கினால், 1972இற்கு பின்னர் இடம்பெற்ற முக்கியமானதோர் அமெரிக்க உயர்நிலை பிரதிநிதியின் விஜயமாக 2015இல் இடம்பெற்ற இராஜாங்கச் செயலர் ஜோன் ஹெரியின் கொழும்பு வருகை அமைந்திருந்தது. ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து ஹெரி கொழும்பிற்கு விஜயம் செய்திருந்தார். அதன் பின்னர் தற்போது பொம்பியோவின் விஜயம் இடம்பெற்றுள்ளது. அமெரிக்காவில் அடுத்த மாதம் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில், பொம்பியோவின் விஜயம் இடம்பெற்றிருப்பதும் குறிப்பிடத்தக்கது. புதுடில்லியில் இடம்பெற்ற இருதரப்பு அமைச்சர்கள் சந்திப்பினைத் தொடர்ந்தே, (**U.S.-India 2+2 Ministerial Dialogue**) பொம்பியோ கொழும்பிற்கு விஜயம் செய்திருக்கின்றார். மேற்படி சந்திப்பிற்காக அமெரிக்க பாதுகாப்புச் செயலர் மார்க் எஸ்பரும் புதுடில்லி சென்றிருந்தார். மார்க் எஸ்பர் சில வாரங்களுக்கு முன்னர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் தொலைபேசி மூலம் பேசியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் அமெரிக்காவிற்கும் இலங்கைக்குமான உறவு சுமூகமாக இருந்திருக்கவில்லை. இறுதி யுத்தத்தின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமைகள் மீறல் தொடர்பில் அமெரிக்கா தொடர்ச்சியான அழுத்தங்களைப் பிரயோகித்திருந்தது. ஆனால், ராஜபக்ஷ மேற்குலக அழுத்தங்களுக்குப் பெரியளவில் பொறுப்புக் கூற முயற்சிக்கவில்லை. மாறாக, அதிகம் சீனாவை நோக்கிச் சாய முற்பட்டார். இவ்வாறானதொரு சூழலில்தான் 2015இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. புதிய அரசாங்கத்திற்கும் அமெரிக்காவிற்கும் இடையில் நெருக்கமான உறவிருந்தது. ஆனாலும்கூட, அமெரிக்காவின் திட்டங்கள் சிலவற்றை முன்கொண்டு செல்ல முடியவில்லை. எம்.சி.சி. உடன்பாடு மற்றும் சோபா உடன்பாடு ஆகியவை தொடர்ந்தும் தென்னிலங்கை அரசியலில் சூடான விவாதங்களையும் எதிர்ப்பையுமே ஏற்படுத்தியிருக்கின்றன. எதிர்பார்த்தது போன்று ஆட்சி மாற்றத்தால் சில விடயங்களை நகர்த்த முடியவில்லை. மாறாக, அம்பாந்தோட்டை துறைமுகத்தின் ஊடாக, சீனா மேலும் இலங்கைக்குள் காலூன்றியிருக்கின்றது.

இவ்வாறாதொரு பின்னணியில், ராஜபக்ஷக்கள் மீளவும் அதிகாரத்தைக் கைப்பற்றியிருக்கின்ற நிலையில்தான், பொம்பியோவின் விஜயம் இடம்பெற்றிருக்கின்றது. அண்மைக்காலமாக உலகளவில் அமெரிக்காவிற்கும் சீனாவிற்கும் இடையிலான முரண்பாடுகள் தீவிரமடைந்திருக்கின்றன. இவ்வாறானதொரு சூழலில் இரண்டு சக்திகளையும் சமாளித்துச் செல்ல வேண்டிய கத்தி மேல் நடக்கும் பயணத்தை கோட்டாபய அரசாங்கம் ஆரம்பித்திருக்கின்றது. இதில் என்னவெல்லாம் நடைபெறலாம் என்பது ஊகங்களுக்கு அப்பாற்பட்டவை. பொம்பியோ எவ்வாறான விடயங்களை வலியுறுத்தினார் - அதற்கு கொழும்பு எவ்வாறான பதிலை வழங்கியது என்பனவும் கூட ஊகங்களாக உலவலாம்.

# அமெரிக்க இராஜாங்க செயலாளரின் கொழும்பு வருகை குறித்த சீனாவின் பார்வை !

- அலசுவது **இராஜதந்திரி** -



அமெரிக்க இராஜாங்க செயலாளர் மைக் பொம்பியோவின் இலங்கை விஜயம் குறித்த சீனாவின் அபிப்பிராயத்தை ஓர் அறிக்கை மூலமாக கொழும்பிலுள்ள சீனத் தூதரகம் வெளியிட்டிருந்தது.

இந்த அறிக்கை அமெரிக்க இராஜாங்க அமைச்சரின் நேற்றைய கொழும்பு வருகை தென்னாசியப் பிராந்தியத்தில் உள்ள நாடுகளுக்கிடையே நிலவக்கூடிய நல்லுறவுக்கு குந்தகம் விளைவிப்பதாக இருக்கின்றதென்று சுட்டிக் காட்டியுள்ளது.

இந்த அறிக்கை இலங்கைக்கும் சீனாவுக்குமிடையே நிலவிவருகின்ற பன்னெடுங்கால உறவை சுட்டிக்காட்டியிருப்பதோடு, அமெரிக்கா இந்த உறவில் தலையிட்டு பிராந்திய ரீதியான நல்லுறவுகளுக்கு குந்தகம் விளைவிக்கக் கூடாதெனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்து சமுத்திரத்தின் முத்து என வர்ணிக்கப்படும் இலங்கைத் தீவு கடல் வாணிபத்தின் கேந்திர முக்கியத்துவம்மிக்க ஸ்தானமாக அமைந்துள்ளது.

இதன்காரணமாக, அமெரிக்கா மற்றும் சீனா மட்டுமல்ல. உலகிலுள்ள பெரும்பாலான நாடுகள் இலங்கையுடன் மிக நீண்டகால உறவுகளைக் கொண்டிருப்பதோடு, காலனித்துவ ஆட்சிகளுக்கு உட்பட்ட நாடாகவும் இலங்கை விளங்குகின்றது.

இலங்கை பிரிட்டிஷ் ஆட்சிக்கு உட்பட்ட காலம்முதல்அமெரிக்காவின் உறவும்இலங்கையோடு பின்னிப்பிணைந்ததாகவே காணப்படுகின்றது.

அனைத்து நாட்டவராலும் விரும்பப்படும் நாடாக இலங்கை விளங்குவதோடு சர்வதேச ரீதியிலான கெடுபிடிகளுக்கு பெரிதும் முகங்கொடுக்காத நாடாகவும் விளங்குகின்றது.

இருப்பினும், மூன்று தசாப்தகால யுத்தம் முடிவுக்கு வந்தமையும், அந்த மூன்று தசாப்த காலத்தில் சர்வதேச ரீதியாக ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் என்பவையும் இன்று பூகோள அரசியலிலும் முக்கியத்துவம்மிக்க நாடாக இலங்கையை தென்னாசியப் பிராந்தியத்தில் மாற்றம் பெறவைத்துள்ளது.

மறைந்த சீன அதிபர் டெங் சியா வோ பெங்கின் வழிகாட்டலில் வியத்தகு மாற்றங்களை கண்டுள்ள சீனா, பொருளாதார ரீதியாக சர்வதேச ரீதியில் பிரமிக்கத்தக்க வளர்ச்சியையும் கண்டுள்ளது.

மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் மூங்கில் திரை நாடென விபரிக்கப்பட்ட சீனா, தற்போது திறந்த பொருளாதார திட்டங்களோடு உலகின் முன்னணி தயாரிப்புகளைத் தயாரிக்கும் நாடாகக்கூட மாற்றம் பெற்று, மேற்குலகை வியப்பிலாழ்த்தியுள்ளது.

இந்நிலையில் தென்னாசியக்கடல் பிராந்தியம் மற்றும் தென்கிழக்காசிய கடல் பிராந்தியம் என்பவை சர்வதேச கப்பல் போக்குவரத்தில் கேந்திர முக்கியத்துவம் மிக்கவையாகக் காணப்படுகின்ற காரணத்தினால், சீனாவின் வளர்ச்சி ஆசிய பிராந்தியத்தில் அந்நாட்டை முற்றுமுழுதான வல்லரசாக மாற்றிவிடுமோ என்ற காரணத்தினாலேயே அமெரிக்கா தென்னாசிய பிராந்தியத்தில் தனது கவனத்தை திருப்பியுள்ளது.

இதன் வெளிப்பாடாகவே அமெரிக்க இராஜாங்க அமைச்சர் மைக் பொம்பியோ இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளுக்கு தனது விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

இந்தியாவில் அமெரிக்க இராஜாங்க அமைச்சர் மைக் பொம்பியோ இராணுவ உதவிகள் பற்றியும் ஆராய்ந்ததோடு, இந்தியாவுக்கு செய்மதிகள் மூலமாக கேந்திர முக்கியத்துவ மிக்க தரைப்பகுதிகளை கண்டறியக் கூடிய சாதனங்களை வழங்கவும் ஒப்புதலாகியுள்ளது.

சீனாவைப் பொறுத்தவரை அதன் வுஹான் பிராந்தியத்தில் தோன்றிய கொரோனா வியாதி இன்று முழு உலகையும் மிரட்டியுள்ளதோடு, அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் கொரோனாவை ‘சீன வியாதி’ என்றும் வர்ணித்து உலக நாடுகள் சீனாவை புறக்கணிக்க வேண்டுமெனவும் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச எல்லைகளை அசுர வேகத்தில் தொட்டுச்சென்று அமெரிக்காவை கொரோனா வெகுவாகவே பாதித்துவிட்டுள்ளது. கூடவே அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் கூட கொரோனாவினால் பாதிக்கப்பட்டு தற்சமயம் தேறியுள்ளார்.

இலங்கையைப் பொறுத்தவரை 2009ஆம் ஆண்டு உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்தபின்னர் சீனாவும் , இந்தியாவும் ஒன்றையொன்று போட்டியிட்டுக் கொண்டு இலங்கையைத் தமது கட்டுமான வல்லமை மூலமாக வசப்படுத்தும் முயற்சிகளில் இறங்கியதோடு, இலங்கையின் வரைபடத்தில் கூட மாற்றங்களைக் கொண்டுவரும் விதத்தில் சீனா துறைமுக அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கொழும்பில் கடலுக்குள்ளேயே ஒரு புதிய பிரமாண்டமான நிலப்பிரதேசத்தை உருவாக்கி தனது வல்லரசுப் பலத்தைப் பொருளாதார ரீதியாக நிரூபித்துள்ளது.

இப்பின்னணியில், அமெரிக்க இராஜாங்க அமைச்சர் மைக் பொம்பியோவின் இலங்கை விஜயம் , அதுகுறித்த சீனாவின் அபிப்பிராயம் என்பவை கெடுபிடிக்குள்ளாகிவரும் தென்னாசியப் பிராந்திய அரசியலில் இலங்கை மிக விழிப்போடு இருக்க வேண்டியதன் அவசியத்தையே வலியுறுத்துவதாக இருக்கின்றது. ■

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



செய்திகள்

# குருநகர்,பாஷையூர் பகுதிகளுள் வெளியார் செல்வதற்குத் தடை!

## கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டதை அடுத்து

**யாழ்ப்பாணம், ஒக்.28**

**குருநகர், பாஷையூர் பகுதிகளுக்கு வெளியாட்கள் செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.**





நேற்று முன்தினம் குருநகர் பகுதியில் இருவர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியிருந்தமை பி.சி.ஆர் பரிசோதனை மூலம் இனங்காணப்பட்டது.

சன நெருக்கம் அதிகமுள்ள குருநகர் பகுதியில் ஏனையவர்களுக்கு தொற்று பரவுவதைத் தடுப்பதற்காக அந்தப் பகுதியைச் சாராதவர்கள், வெளிநபர்கள் உட்செல்வதற்கு சுகாதாரப் பகுதியினரால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நான்கு இடங்களில் வீதித் தடைகள் அமைக்கப்பட்டுள்ளன. வீதித் தடைகளில் பொலிஸார், இராணுவத்தினர் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (அ)

# மணிவண்ணன் மனு மீது நீதிமன்ற கட்டளை இன்று

யாழ்ப்பாணம், ஒக் 28

யாழ்ப்பாணம் மாநகர சபையின் உறுப்பினர் சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணனை அந்தப் பதவியிலிருந்து நீக்கும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் தீர்மானத்துக்கு இடைக்காலத் தடை கோரும் விண்ணப்பம் மீதான கட்டளை இன்று வழங்கப்படும் என்று யாழ்ப்பாணம் மாவட்டம் நீதிமன்றம் தவணையிட்டது.

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் சார்பில் யாழ்ப்பாணம் மாநகர சபைக்குத் தேர்ந்து அனுப்பப்பட்ட வி.மணிவண்ணன், தமது பங்காளிக் கட்சியான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியிலிருந்து நீக்கப்பட்டதால் மாநகர சபை உறுப் பினர் பதவியிலிருந்து நீக்குமாறு அந்தக் கட்சி யாழ்ப்பாணம் தெரிவத்தாட்சி அலுவலரிடம் கேட்டுக்கொண்டது.

அதனடிப்படையில் வி. மணிவண்ணனின் யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் பதவி வறிதாகியதாக யாழ்ப் பாணம் தெரிவத்தாட்சி அலுவலரால் அவருக்கு அறிவிக்கப்பட்டது.

தனது உறுப்புரிமை நீக்கத்தைச் சவாலுக்குட்படுத்தி யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில் சட்டத்தரணி வி. மணி வண்ணன், சிறப்பு மனுவை தானே தாக்கல் செய்தார் .

மனுவின் பிரதிவாதிகளாக அகில இலங்கை தமிழ்க் காங்கி ரஸின் தலைவர் ஆனந்தராசா, பொதுச் செயலாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், யாழ்ப் பாணம் தெரிவத்தாட்சி அலுவலர் உள்ளிட்ட நான்கு தரப்பினரை மனுதாரர் குறிப்பிட்டிருந்தார்.

தனது பதவி நீக்கத்தை சட்டவலுவற்றதாக உத்தரவிடுமாறு கோரிய மனுதாரர், அதன் மீதான விசாரணை நிறைவடைந்து இறுதிக் கட்டளை வரும் வரை இடைக்காலத் தடைக் கட்டளையை வழங்குமாறும் கோரியிருந்தார்.

இந்த மனு நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி வி.இராமக்கமலன் முன்னிலையில் விசாரணைக்கு அழைக்கப்பட்டது. மனுதாரரின் விண்ணப்பம் தொடர்பில் ஆராய்ந்து இன்று புதன்கிழமை இடைக்காலக் கட்டளை வழங்கப்படும் என்று நீதிபதி தவணையிட்டார். (அ)

# ஹற்றன் நகர் நேற்று முதல் தனிமைப்படுத்தப்பட்டது

கொழும்பு, ஒக் 28

ஹற்றன் நகரம் உடன் நடைமுறைக்கு வரும் வகையில் தனிமைப்படுத்தல் பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்று பற்றிய தகவல்களுக்குப் பிறகு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி தெரிவித்தார்.

மறு அறிவித்தல் வரை ஹற்றன் நகரம் தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் என்று அவர் குறிப்பிட்டார்.

# யாழ்.பல்கலைக்கழக தீர்மானத்தால் வெளிவாரி பரீட்சார்த்திகள் விசனம்

யாழ்ப்பாணம், ஒக் 28

கொரோனா தொற்று அபாயத்தையடுத்து நாட்டில் எழுந்துள்ள நிலைமை காரணமாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இம்மாதம் நடத்தவிருந்த சகல பரீட்சைகளையும் ஒத்திவைத்துள்ள நிலையிலும், பல்கலைக்கழகங்களின் விரிவுரைகளை ஒன்லைன் மூலமாக நடத்துவதற்குப் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழு நடவடிக்கை எடுத்துள்ள போதிலும் யாழ். பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பரீட்சைகளை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறித்து விசனம் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தினால் நடத்தப்படும் வணிகமாணி (வெளிவாரி) கற்கைநெறியின் 3 ஆம் வருட முதலாம் அரையாண்டுப் பரீட்சைகள் எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்நிலையில், நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக - மாவட்டங்களுக்கிடையிலான பொதுப் போக்குவரத்து சேவைகள் நிறுத்தப்பட்டிருக்கும் நிலையிலும், சில பிரதேசங்கள் முடக்கப்பட்டிருப்பதனாலும் பரீட்சைக்கு வருவதிலிருந்து தாம் பல சிரமங்களை எதிர்நோக்கி இருப்பதாகவும், சுகாதார அச்சுறுத்தல் காரணமாகத் தாங்கள் பரீட்சைக்குத் தோற்றத் தவறி, கடந்த மாதம் இடம்பெற்ற கலைமாணிப் பரீட்சையைப் போல ஒரு சில பரீட்சார்த்திகள் மாத்திரம் பரீட்சைக்கு வந்து, பரீட்சை நடத்தப்பட்டால் தமது வாய்ப்புகள் பறிபோகும் நிலை இருப்பதாகவும் பரீட்சார்த்திகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில், கிளிநொச்சி, மன்னார் மற்றும் மட்டக்களப்புப் பகுதிகளைச் சேர்ந்த பரீட்சார்த்திகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு கேட்ட போதும், நாட்டு நிலைமையைப் பற்றி எந்தவிதமான கரிசனையும் இன்றி, "பரீட்சை நடைபெறும், வராமல்விட்டால் உங்கள் வாய்ப்புத் தான் வீணாகும்" என்று பதிலளிக்கப்பட்டமை தமக்குக் கவலையளிப்பதாகப் பரீட்சார்த்திகள் தெரிவித்துள்ளனர். (அ)

# இரத்தினபுரி மாவட்டத்தில் பல கிராமங்கள் முடக்கம்!

கொழும்பு, ஒக் 28

இரத்தினபுரி பொலிஸ் அதிகாரப் பிரதேசத்தில் ஒரே நாளில் மாத்திரம் நான்கு நோயாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து இப்பிரதேசத்தின் பல கிராமங்கள் சுகாதார மற்றும் பாதுகாப்புத்துறையின் உத்தரவுகளுக்கமைய இணங்க நேற்று முன்தினம் முதல் மறு அறிவித்தல் வரை முடக்கப் பட்டுள்ளன.

பேலியகொடை மீன் சந்தை கொரோனா கொத்தணியுடன் தொடர்புடைய இரத்தினபுரி மல்வல எம்புல்தெனிய கிராமத்தின் நபர் மற்றும் அவரின் இரண்டு குழந்தைகளுக்கும் கொரோனா வைரஸ் தொற்றியுள்ளது எனவும், இதேபோன்று எஹலியகொடை பிரதேச நபர் ஒருவருக்கும் இத்தொற்று உள்ளது எனவும் இப்பிரதேசங்களின் பொதுச் சுகாதார அதிகாரிகாரியாலயங்கள் நேற்று முன்தினம் உறுதிப்படுத்தின.

இதனையடுத்து இரத்தினபுரி பொலிஸ் அதிகார பிரதேசத்தின் எகொட ஸ்ரீபாகம, உதுருகிலீமல, தகுனு கிலீமல, கெட்டவல, மாபலான ஆகிய




கிராமங்கள் முடக்கப்பட்டன.

மேலும் நேற்றுமுன்தினம் காலை முதல் குருவிட்ட ஹேனெகம - ஒலுகல வீதி, குருவிட்ட - ரத்துருகல ஆகிய வீதிகளும் அவற்றில் உள்ளடக்கப்படும் சில கிராமப் பகுதிகளும் மறு அறிவித்தல் வரை முடக்கப்பட்டுள்ளன.

மேற்படி கிராமங்களும் வீதிகளும் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக மூடப்பட்டுள்ள நிலையில் ஏனைய கிராமங்களில் வாழும் மக்கள் சுகாதார அறிவுறுத்தல்களை முழுமையாகப் பேணுவதன் மூலம் தத் தமது பிரதேசங்கள் முடக்கப் படும் அச்சுறுத்தலில் இருந்து பாதுகாத்துக் கொள்ளலாம் எனச் பொதுச் சுகாதார வைத் திய அதிகாரிகள் தெரிவித்தனர். (அ)

# கடற்படை ரக்பி வீரருக்கு கொரோனா!

கொழும்பு, ஒக் 28

கடற்படை விளையாட்டுக் கழகத்தின் ரக்பி வீரர் ஒருவர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளார்.

இருப்பினும் பாதிக்கப்பட்ட நபர் கடந்த மூன்று மாதங்களில் எந்தவொரு போட்டிகள், நிகழ்வுகளிலும் கலந்துகொள்ளவில்லை.

அவர் மினுவாங்கொடை-பேலியகொடை கொரோனா கொத்தணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

# மஸ்கெலியா கடைகள் 30ஆம் திகதிவரை பூட்டு

கொழும்பு, ஒக் 28

மஸ்கெலியா பிரதேச சபைக்குட்பட்ட பகுதியிலுள்ள அனைத்து வர்த்தக நிலையங்களும் நேற்று மாலை 4 மணி முதல் எதிர்வரும் 30 ஆம் திகதிவரை மூடப்பட்டிருக்கும் என்று பிரதேச சபையின் தவிசாளர் செண்பகவள்ளி தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கிலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார்.

மஸ்கெலியா கங்கேவத்த பகுதியில் பேலியகொடை மீன்சந்தையோடு தொடர்புடைய ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிப் படுத்தப்பட்ட நிலையில் அவரது மனைவிக்கும் நேற்று வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளது.

எனவே சமூகப்பரவல் தடுக்கும் நோக்கத்தில் மஸ்கெலியா பிரதேச சபைக்குட்பட்ட மஸ்கெலியா நகரம் மற்றும் சாமிமலை உள்ளிட்ட நகரங்கள் நேற்று மாலை 4 மணிமுதல் 30ஆம் திகதிவரை தற்காலிகமாக மூடுவதாக அறிவித்துள்ளார்.

# பிள்ளையானின் கட்சியால் கிழக்கு மக்களுக்கு பாதிப்பு

## சாணக்கியன் எம்.பி. குற்றச்சாட்டு

மட்டக்களப்பு, ஒக் 28

**தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியினர் சுயநலத்துடன் செயல்பட்டு வருகின்றமை காரணமாக மட்டக்களப்பு மாவட்ட மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் குற்றம் சுமத்தியுள்ளார்.**



மட்டக்களப்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

20ஆவது திருத்தச் சட்டம் தொடர்பாக வாக்களிக்கும் போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 10 பாராளுமன்ற உறுப்பினர்களும் இது ஜனநாயக விரோதமான செயல், இந்த நாட்டைப் பின்கொண்டு செல்லும் செயல் என்ற அடிப்படையில் அதற்கு எதிராக வாக்களித்திருந்தோம்.

இதன்போது, இஸ்லாமிய சகோதரர்க்ள் சிலர் அதற்கு ஆதரவாக வாக்களித்திருக்கின்றார்கள். அது தொடர்பாக பல கருத்துகளை பலரும் கூறிவருகின்றனர்.

என்னைப் பொறுத்தவரை இஸ்லாமிய சகோதரர்கள், தங்களுடைய எதிர்காலம் தொடர்பாக ஏதேனும் ஒப்பந்தங்கள் செய்து அதற்கு ஆதரவாக வாக்களித்திருக்கலாம் என நான் கருதுகின்றேன்.

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த இருவரும் 20ஆவது திருத்தச்சட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்திருந்தனர். வியாழேந்திரன் மொட்டுக்கட்சியைச் சேர்ந்தவர். அதனால் அவர் அதற்கு ஆதரவாக வாக்களித்திருக்கலாம். ஆனால், பிள்ளையானின் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி ஒரு தனிக்கட்சியாகும். அவர்கள் ஏதாவது ஒப்பந்தங்கள் செய்தார்களா என்ற கேள்வி எங்கள் மனதில் இருக்கின்றது.

மயிலந்தனை, மாதவணை பிரச்னையை மகாவலி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சென்று நிறுத்தச் சொல்லிக் கேட்பதை விட 20ஆவது திருத்த சட்டத்திற்கு ஆதரவு தருவதாயிருந்தால் இந்த பிரச்னையை நிறுத்தவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்திருக்க முடியும்.

மேலும், கல்முனை- வடக்கு பிரதேச தரமுயர்த்துவது தொடர்பிலான கோரிக்கையை முன்வைத்திருக்கலாம் அல்லது அரசியல் கைதிகள் 62பேர் இன்னும் உள்ளனர். அவர்களை விடுதலை செய்தால் ஆதரிப்போம் என்றிருக்கலாம். தமிழ் பகுதிகளில் பாதுகாப்புப் பிரிவினர் வைத்திருக்கும் காணிகளை விடுவிக்குமாறு கோரியிருக்க முடியும். இவ்வாறு பல நிபந்தனைகளை முன்வைத்து வாக்களித்திருக்க முடியும்.

தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி தனிக்கட்சி என்ற அடிப்படையில் பேரம் பேசும் சக்தி இலகுவாக இருந்திருக்கும்.

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழுவின் இணைத் தலைவர் பதவி ஆசை காரணமாக மாவட்ட மக்கள் மிகவும் கஷ்டங்களை எதிர்கொண்டு வருகின்றனர்-என்றார். (அ)



# கிளிநொச்சி சந்தையில் பி.சி.ஆர். பரிசோதனை

கிளிநொச்சி, ஒக் 28

கிளிநொச்சி மீன் சந்தையில் நேற்று 60 மீன் வியாபாரிகளிடம் பி.சி.ஆர். பரிசோதனைகளுக்காக மாதிரிகள் பெறப்பட் டன.

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரால் இந்த மாதிரிகள் பெறப்பட்டன.

பேலியகொடை மீன் சந்தையில் ஏற்பட்ட கொரோனா தொற்று பரவல் காரணமாக யாழ்ப்பாணத்தில் இருவருக்கு தொற்று ஏற்பட்டிருந்தது. எனவே இதனை கருத்தில்

கொண்டு முன்னாய்த்த நடவடிக்கையாக கிளிநொச்சி மீன் சந்தையிலும் 60 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனைக்காக மாதிரிகள் எடுக்கப்பட்டன. (அ)

# மேலும் 110 பேர் குணமடைவு

கொழும்பு, ஒக் 28

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி சிகிச்சைப் பெற்று வந்தவர்களில் மேலும் 110 பேர் பூரண குணமடைந்து மருத்துவமனைகளில் இருந்து வெளியேறியுள்ளனர்.

அதன்படி, இலங்கையில் இதுவரை கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி பூரண குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4,043 ஆக அதிகரித்துள்ளது. (அ)

உங்கள் துயரங்களைப் பகிர்ந்துகொள்ள
புதிய தளம்
துயர் .நெற்
THUYAR.NET
➤ மரண அறிவித்தல்
➤ நன்றி நவிலல்
➤ நினைவஞ்சலி விளம்பரங்கள்
துயர் .நெற் இல் பிரசுரமாகும் ஒவ்வொரு துயர்பகிர்வு விளம்பரங்களும்
ஈழநாடு
ஈழநாடு பத்திரிகையில் பிரசுரமாகும் அதேவேளை
DAN NEWS
டான் நியூஸ் தொலைக்காட்சியிலும் துயர்பகிர்வோம் நிகழ்ச்சியில் ஒளிபரப்பாகும்





# யாழில் 101 பயிலுநர்களுக்கு நேற்று நியமனக் கடிதங்கள்

யாழ்ப்பாணம், ஒக் 28

'சுபீட்சத்தின் நோக்கு' ஜனாதிபதியின் எண்ணக் கருவுக்கு அமைய ஒரு லட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் வேலைத் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாண மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 101 பயிலுநர்களுக்கு நேற்று நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

யாழ். மாவட்ட செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் யாழ். மாவட்ட அரச அதிபர் க. மகேசன் மற்றும் யாழ். மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவர் அங்கஜன் இராமநாதன் கலந்து கொண்டு நியமனக் கடிதங்களை வழங்கினார். (அ)

# ரிஷாத் பதியுதீனின் விளக்கமறியல் நீடிப்பு

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் விளக்கமறியல் எதிர்வரும் நவம்பர் 10ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்காக போக்குவரத்துச் சபை பஸ்களில் இடம்பெயர்ந்தோரை ஏற்றிச் சென்றதன் அடிப்படையில் பொது நிதியைக் குற்றவியல் முறையில் தவறாகப் பயன்படுத்தியமை மற்றும் தேர்தல் சட்டங்களை மீறியமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் கடந்த வாரம் கைது செய்யப்பட்ட ரிஷாத் பதியூதீன் நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

இந்த நிலையில் வழக்கு கோட்டை நீதிவான் முன்னிலையில் நேற்று அழைக்கப்பட்டபோது, ரிஷாத் பதியுதீனின் விளக்கமறியலை நீடித்து நீதிமன்றம் உத்தரவிட்டது. (அ)

கட்டுரை

> பிரித்தானிய அரசு விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடைசெய்தது போலவே மேலும் சில சர்வதேச அமைப்புகளைத் தடை செய்துள்ளது. இவ்வாறான தடைகளைத் தீர்மானிப்பதற்கு சில ஒழுங்கு முறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த நிறுவனங்களே நாட்டின் பயங்கரவாதத் தடுப்புத் தொடர்பான பிரதான முடிவுகளை மேற்கொள்கின்றன. இவர்களே விடுதலைப் புலிகள் தொடர்பான பல விவரங்களைத் திரட்டி முடிவுகளை மேற்கொள்கின்றனர். இந்த நிறுவனங்கள், தடையை நீக்குவது நாட்டின் பாதுகாப்பிற்கு ஆபத்தானது எனக் கருதுமாயின், அமைச்சர் அதற்கு மாறாக முடிவுகளை மேற்கொள்ள முடியாது.

# புலிகளின் சர்வதேச வலைப்பின்னல் இன்னமும் உயிர்ப்புடன் உள்ளது

● வி. சிவலிங்கம்

**(நேற்றைய தொடர்ச்சி)**

பலர் இவ் விசாரணை முடிவுகளை வெறுமனே தடை நீக்கம் என்ற சுருங்கிய செய்திக்குள் கவனத்தைச் சுருக்கி மகிழ்ச்சி அடைவதாகக் காணப்படுகிறது. ஆனால், நிலைமை அவ்வாறில்லை. உதாரணமாக, தமிழ் அரசியல்வாதிகள் பலர் தமது செயல்பாடுகள் சர்வதேச அரசுகளின் கவனங்களைக் குவிப்பதற்காக மேற்கொள்ளப்படுவதாக நியாயம் கற்பிக்கின்றனர். குறிப்பாக, பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் தமது பாராளுமன்ற பிரவேசம் என்பது இலங்கை அரசின் முடிவுகளை பாராளுமன்ற கதிரைகள் மூலம் மாற்ற முடியும் என்பதை விட, சர்வதேச அரசுகளுக்கு உணர்த்துவதாகவே கூறுகின்றனர்.

ஆனால் இவ் விசாரணைச் சாட்சியங்களை அவதானிக்கும்போது, சர்வதேச அரசுகள் வெறுமனே அரசியல் செயல்பாடுகளை மட்டுமல்ல, அரசியல்வாதிகளின் செயற்பாடுகளின் உள்ளடக்கங்களையும் நன்கு தெரிந்தே உள்ளன என்பது வெளிப்பட்டுள்ளது. எனவே, சர்வதேச அரசுகளுக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் உணர்த்தியே தெரிய வேண்டும் என்ற அவசியம் இல்லை என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

பிரித்தானிய அரசு விடுதலைப் புலிகள் தொடர்பாக கொண்டிருக்கும் அபிப்பிராயங்களை, இவ் விசாரணையில் அரச தரப்பு உளவுத்துறை அதிகாரி கடந்த 2019 செப்ரெம்பர் 25ஆம் திகதி தெரிவித்த சாட்சியங்களிலிருந்து அறிய முடிகிறது.

இவ்வதிகாரி அவ் வேளையில் பிரித்தானிய பயங்கரவாத தடுப்புப் பிரிவின் தலைவராகச் செயற்பட்டுள்ளார். இதன் தலைமையகம் பிரித்தானிய உள்நாட்டு அமைச்சில் உள்ளது.

விடுதலைப்புலிகள் பற்றிய சுருக்கமான விவரம் பின்வருமாறு:

- விடுதலைப்புலிகள் அமைப்பு வே. பிரபாகரன் என்பவரால் 1976ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது.
- 2009ஆம் ஆண்டு அவர் இறக்கும் வரை அதன் தலைவராக செயற்பட்டார்.
- இலங்கையில் வாழும் தமிழ் சிறுபான்மையினருக்கென வடக்கு, கிழக்கு பகுதிகளில் தனியான அரசு ஒன்றினை உருவாக்குவது இதன் நோக்கமாகும்.
- அந்த இலக்கை நோக்கிச் செல்வதற்காக பொதுமக்கள், சமூக உட்கட்டுமானங்கள், அரச இலக்குகள் என்பற்றிற்கு எதிராக, பாகுபாடற்ற வன்முறையைப் பிரயோகித்தார்.
- அத்துடன், கடல்கடந்த நாடுகளிலும் அவ்வாறான செயல்கள் மேற்கொள்ளப்பட்டன.
- இவ்வகை வன்முறைச் செயற்பாடுகள் ஒரு சிவில் யுத்தத்தை உருவாக்க உதவின.
- இவ் யுத்தத்தில் தரை, வான், கடல் படைகள், தற்கொலைக் குண்டுதாரிகள் போன்றன பயன்படுத்தப்பட்டன.
- இலங்கை மற்றும் இந்திய முக்கிய அரசியல்வாதிகள் படுகொலை செய்யப்பட்டனர்.
- இதில் 1991இல் அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜிவ் காந்தி, 1993இல் இலங்கைப் பிரதமர் ரணசிங்க பிரேமதாஸ என்போர் கொல்லப்பட்டனர்.
- 2009ஆம் ஆண்டு மே மாதம் இலங்கை இராணுவம் விடுதலைப் புலிகளைத் தோற்கடித்தது.
- இது பாரிய தாக்கத்தை அவர்களுக்கு ஏற்படுத்தியது.
- இதனால் இலங்கையில் அவர்களால் பாரிய தாக்குதல்களை மேற்கொள்ள முடியவில்லை.
- அதன் முக்கிய தலைவர்கள் உயிருடன் பிடிபட்டார்கள் அல்லது கொல்லப்பட்டார்கள்.




## தடையை நீக்குவது சாத்தியப்பட போவதில்லை

இவ் விவரங்களைத் தெரிவித்த உளவுத்துறை அதிகாரி, விடுதலைப்புலிகள் தற்போதும் பயங்கரவாதத்தில் ஈடுபட்டுள்ளார்களா? என்ற கேள்விக்குப் பின்வரும் நியாயங்களை முன்வைத்தார்.

- அவர்கள் தோற்கடிக்கப்பட்ட போதிலும் அவர்களால் உருவாக்கப்பட்ட சர்வதேச தொடர்புகள் வலைப்பின்னல் இன்னமும் அப்படியே உள்ளது.
- அவர்கள் இன்னமும் வன்முறையைக் கைவிடவோ அல்லது ஆயுதங்களை ஒப்படைக்கவோ அல்லது தமது அமைப்பைக் கலைத்து விட்டதாகவோ தெரிவிக்கவில்லை.
- இவ்வாறு தடைப் பட்டியலிலிருந்து விடுதலைப் புலிகளை நீக்கும்படி முன்னர் 3 தடவைகள் விண்ணப்பித்த போதிலும் அவை நிராகரிக்கப்பட்டன. 2014ஆம் ஆண்டு இறுதியாக தமது விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தார்கள்.

பிரித்தானிய அரசு விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடைசெய்தது போலவே மேலும் சில சர்வதேச அமைப்புகளைத் தடை செய்துள்ளது. இவ்வாறான தடைகளைத் தீர்மானிப்பதற்கு சில ஒழுங்கு முறைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த நிறுவனங்களே நாட்டின் பயங்கரவாதத் தடுப்புத் தொடர்பான பிரதான முடிவுகளை மேற்கொள்கின்றன. இவர்களே விடுதலைப் புலிகள் தொடர்பான பல விவரங்களைத் திரட்டி முடிவுகளை மேற்கொள்கின்றனர். இந்த நிறுவனங்கள், தடையை நீக்குவது நாட்டின் பாதுகாப்பிற்கு ஆபத்தானது எனக் கருதுமாயின், அமைச்சர் அதற்கு மாறாக முடிவுகளை மேற்கொள்ள முடியாது.

எனவே, இந்த உளவுத்துறை நிறுவனங்கள் இத் தடை நீக்க விண்ணப்பம் தொடர்பாக கொண்டிருக்கும் அபிப்பிராயங்கள் முக்கியமானவை. ஆணைக்குழுவினர் தடையை நீக்குவது பற்றிய முடிவை மீளாய்வு செய்வதற்கு தற்போது அனுமதித்துள்ள போதிலும், பலர் ஆரவாரிப்பது போல முடிவுகள் அமையப்போவதில்லை. ஏனெனில், உளவுத்துறை அறிக்கைகள் அவ்வாறான நம்பிக்கையை இவ் விசாரணையின்போது வெளிப்படுத்தவில்லை.

எனவே, உளவுத்துறை நிறுவனங்களின் அறிக்கை பற்றிய விவரங்களைத் தொடர்ந்து பார்க்கலாம்.

உளவுத்துறை அறிக்கைகளும் பின்னணியும் உளவுத்துறையில் இரண்டு பிரதான நிறுவனங்கள் செயற்படுகின்றன. இதில், உள்நாட்டு அமைச்சில் செயற்படும் 'இணைந்த பயங்கரவாத ஆய்வு மையம்' என்பதும், 'தடை நீக்கம் செய்வது குறித்த மீளாய்வு குழு' என்பதுமாகும்.

இணைந்த பயங்கரவாத ஆய்வு மையம் சமர்ப்பிக்கும் முடிவுகளை அடிப்படையாக வைத்தே தடை நீக்கம் செய்வது குறித்த மீளாய்வு குழு அறிக்கை வழங்கும்.

'இணைந்த பயங்கரவாத மைய அறிக்கை'

இந்த அமைப்பு சர்வதேச அளவிலும், உள்நாட்டிலும் செயற்படும் பயங்கரவாத அமைப்புகளின் ஆபத்துகள் குறித்த ஆய்வுகளை மேற்கொள்ளும் நிறுவனமாகும். இந்த அமைப்பு மிகவும் தனித்துவமானது. இந்த அமைப்பின் தலைவர் தனது தகவல்களை பிரதான உளவுத்துறை அமைப்பாகிய 'எம்ஐ 5' என்ற நிறுவன மேலதிகாரிக்கு வழங்குவார்.

இதன் உறுப்பினர்கள் அரசின் பலதரப்பட்ட திணைக்களங்கள், முகவர் அமைப்புகளில் செயற்படுகின்றனர். இதன் பகுதி நேரச் செயற்பாடுகளாக அமைப்புகளைத் தடை செய்வது தொடர்பானவை அமையும். இவர்களே சம்பந்தப்பட்ட அமைப்பு பயங்கரவாத செயல்களில் ஈடுபடுகிறதா? என்பதை உறுதி செய்பவர்கள்.

இவ் விண்ணப்பம் தொடர்பாக இணைப்பு மையத்தின் அபிப்பிராயம் என்பது சில கட்டுப்பாடுகளை உள்ளடக்கியதாகும். அதாவது, தடை செய்வதற்கான காரணமாக பழைய வரலாறுகளை முன்வைக்க முடியாது.

வழங்கப்படும் சாட்சியங்கள் 12 முதல் 18 மாதங்களுக்குள் நடைபெற்றவையாகவும், அதற்கு முந்திய விபரங்களை வரலாறாகவும் பயன்படுத்தலாம் என்பது நிபந்தனையாகும்.

எனவே, விடுதலைப்புலிகள் கடந்த 18 மாதங்களுக்குள் பயங்கரவாத செயல்களில் ஈடுபட்டார்கள் என்பதை நிருபிப்பது உளவுத்துறையின் கடமையாகிறது.

கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற சம்பவம் ஒன்று தொடர்பாக உளவுத்துறை அளித்த சாட்சியங்கள் முன்பின் முரணாக அமைந்த காரணத்தால், இத் தடை நீக்க விண்ணப்பம் மீளாய்விற்கு அனுமதிக்கப்பட்டது. இவ் விவரங்களைப் பின்னர் பார்க்கலாம்.

இங்கு, 'வெளிநாட்டு மற்றும் பொது நலவாய காரியாலயம்' வழங்கிய அறிக்கை மிகவும் பிரதான பங்கை வகிக்கிறது. இந்தக் காரியாலயத்துடன் பிரித்தானியாவில் செயற்படும் பல தமிழ் அமைப்புகள் தொடர்புகளை வைத்திருக்கின்றன. தமிழ் அமைப்புகளில் பல ஒன்றுடன் ஒன்று மோதிக் கொள்ளும் போக்கைக் கொண்டிருப்பதுடன், சில சமயங்களில் தனித்தனியாகச் சென்றும் தமது தகவல்களைப் பரிமாறி வருகின்றன. இதன் பின்னணியில், 'பொதுநலவாய காரியாலயம்' வழங்கிய அறிக்கையின் விவரங்களைப் பார்க்கலாம்.

- இப் பொதுநலவாய காரியாலயம் சர்வதேச பயங்கரவாதம் தொடர்பாக பல தகவல்களைத் திரட்டுகிறது. அதன் அடிப்படையில் இக் காரியாலயம் தனது அறிக்கையை 'சர்வதேச உறவுகளில் தனித்துவ அம்சங்கள்' என்ற தலைப்பில் இரண்டு பிரிவாக சமர்ப்பித்திருந்தது.
- அதில் ஒரு பகுதியை 'தடையை நீக்குவதற்கான காரணங்கள்' எனவும், அடுத்த பகுதியை 'தடையைத் தொடர்வதற்கான காரணிகள்' என்ற தலைப்பிலும் சமர்ப்பித்தது.
- தடையை நீக்குவதற்கான காரணமாக ஒரேயோர் அம்சமே குறிப்பிடப்பட்டது. அதில், 2009இல் போர் முடிவுற்றதும் விடுதலைப் புலிகளை இலங்கை இராணுவம் தோற்கடித்த அமைப்பாக கருதப்பட்டது என மட்டும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், தடை நீக்கத்திற்கு எதிராக பல அம்சங்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன.

**(நாளை தொடரும்)**

# பொம்பியோ வருகைக்கு எதிர்ப்பு அமெ. தூதரகம் முன்பு போராட்டம்










கொழும்பு,ஒக்.28

**அமெரிக்க வெளிவிவகாரச் செயலாளர் மைக் பொம்பியோவின் இலங்கை வருகைக்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணியினர் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் முன்பு நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

இந்தப் போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் உட்பட ஜே.வி.பியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களும், அதன் ஆதரவாளர்களும் கலந்து கொண்டனர்.

இலங்கையின் சுதந்திரம் மற்றும் இறையாண்மையில் தலையிடும் அமெரிக்க அரசாங்கத்தின் முயற்சிகளைக் கண்டிக்கும் நோக்கிலேயே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (எ)

## "இலங்கையை இரையாக்க இடமளியோம்"

கொழும்பு,ஒக்.28

சீனாவின் அச்சுறுத்தலுக்கு எதிராக ஆசிய பிராந்தியத்தில் சுதந்திர வலயம் ஒன்றை ஏற்படுத்துவதே மைக் பொம்பியோவின் இலங்கை விஜயத்தின் நோக்கமாகும்.

எனவே, வல்லரச நாடுகளின் அதிகாரப் போட்டிக்கு இலங்கையை இரையாக்க அரசாங்கம் இடமளிக்கக்கூடாது. இதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்க மாட்டோம் என மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

அமெரிக்க இராஜாங்கச் செயலாளரின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜே.வி.பி. நேற்று அமெரிக்கத் தூதரகத்துக்கு முன்பு மேற்கொண்ட போராட்டத்தில் உரையாற்றும்போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இலங்கையில் அமெரிக்காவின் தலையீடு அதிகரித்து வருவது மிகவும் ஆபத்தானது. சர்வதேச நாடுகளின் போட்டிக்கு எமது நாட்டைப் பயன்படுத்த அனுமதிக்க முடியாது. நாட்டு மக்கள் நலனில் அரசாங்கம் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என்றும்-என்றார்.(எ)

*995 பி.சி.ஆர். பரிசோதனைகள்*

## கொரோனா தொற்றாளர்கள் 11 பேர் மன்னாரில் இதுவரை அடையாளம்

*சுகாதார சேவைகள் பணிப்பாளர் தகவல்*



மன்னார்,ஒக்.28

மன்னார் மாவட்டத்தில் இதுவரை கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் 11 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் டி.வினோதன் தெரிவித்தார்.

மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்றுக் காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

மினுவாங்கொடை கொரோனா கொத்தணி ஆரம்பித்த பின்னர் மன்னார் பட்டித்தோட்டம் பகுதியிலும் பேலியகொடை மீன் சந்தைத் தொகுதி கொரோனா கொத்தணியுடன் தொடர்புடைய இருவர் ஞாயிறு மற்றும் திங்கள் ஆகிய இரு தினங்களிலும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அடையாளம் காணப்பட்ட கொரோனா தொற்றாளர்கள் இருவரும் கொழும்பிலிருந்து மன்னாருக்கு வந்த போக்குவரத்து விபரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இதனடிப்படையில் கடந்த 20ஆம் திகதி இரவு 11.20 மணியளவில் கொழும்பு மத்திய பேருந்து நிலையத்திலிருந்து மன்னார் நோக்கிப் பயணித்த ரத்னா ரவல்ஸ் என்ற தனியார் பேருந்தில் வருகை தந்து 21ஆம் திகதி காலை 8.45 மணியளவில் மன்னார் பேருந்து நிலையத்திலிருந்து தலைமன்னார் நோக்கி இலங்கைப் போக்குவரத்துச் சபை பேருந்தில் பயணத்தை மேற்கொண்ட பயணிகள் மற்றும் 23ஆம் திகதி மாலை 4 மணிக்கு கொழும்பு மத்திய பேருந்து நிலையத்திலிருந்து மன்னார் நோக்கிப் பயணித்த தனியார் பேருந்தான எச்.எஸ்.ரவல்ஸ் மூலம் பயணித்த மக்களும் உடனடியாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை யுடன் தொடர்பு கொள்ளவும்.

இதேவேளை, இந்தப்பேருந்துகளில் பயணித்த மக்கள் உடனடியாக 071-8474361 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி தமது இருப்பிடத்தை தெரியப்படுத்திக் கொள்ளவும்.

மேலும் இம்மாதத்தின் ஆரம்பத்திலிருந்து நேற்று வரை 995 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் 11 பேர் கொரோனா தொற்றாளர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே கொரோனா தொற்றுள்ளவர்கள் என அடையாளம் காணப்பட்ட 11 பேரில் 2 பேர் சிகிச்சையின் பின்னர் இரனவல வைத்தியசாலையிலிருந்து தமது வீடுகளுக்குச் சென்றுள்ளனர்- என்றார். (எ)

## துமிந்த சில்வா திருந்தி வாழ சந்தர்ப்பம் வழங்கவேண்டும்

*மனோ கணேசன் தெரிவிப்பு*

கொழும்பு,ஒக்.28

துமிந்த சில்வா, ஏற்கனவே ஐந்து வருடங்கள் சிறையில் இருந்துள்ளார். அவர் அங்கே சீர்திருத்தத்துக்கு உள்ளாகியுள்ளார் என நம்புகிறேன். அவருக்கு திருந்தி, தனது சமூகத்துடன் வாழ சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும் என நான் எண்ணுகிறேன் என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:

முன்னாள் கொழும்பு மாவட்ட எம்.பி துமிந்த சில்வா கொலை குற்றச்சாட்டின் நிமித்தம் தீர்ப்பளிக்கப்பட்டு சிறையில் இருக்கின்றார். சம்பவம் நிகழும் போது அவர், மது போதையில் இருந்துள்ளார். தற்போது, அவர் சுமார் ஐந்து வருடங்களை சிறையில் கழித்துள்ளார். அவர் மீது சட்டத்தை மீறிய வேறு குற்றங்கள் இருப்பின், சட்ட ஒழுங்கு துறை அவர் மீது குற்றம் சாட்டி வழக்கு தொடரலாம்.

நான், அரசியல்வாதி என்பதை விட ஒரு மனித உரிமைப் போராளி. வெள்ளை வான் கடத்தல், சட்டத்துக்கு அப்பாலான கடத்தல் கொலை, கப்பம், அடாத்தான கைது ஆகியவற்றுக்கு எதிராக உயிர் அச்சுறுத்தலுக்கு மத்தியில் நான் போராடியுள்ளேன்.

இளையோர் நீண்டகாலமாக சிறையில் வைக்கப்பட கூடாது. குற்ற செயல்களில் ஈடுபடும், இளையோருக்கு திருந்தி வாழ வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். இது என் பொதுவான கொள்கை நிலைப்பாடு. துமிந்த சில்வா, ஏற்கனவே ஐந்து வருடங்கள் சிறையில் இருந்துள்ளார். அவர் அங்கே சீர்திருத்தத்துக்கு உள்ளாகியுள்ளார் என நம்புகிறேன். அவருக்கு திருந்தி, தனது சமூகத்துடன் வாழ சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என நான் எண்ணுகிறேன்.

அதேபோல், அரசியல் சார்ந்த குற்றச் செயல்களில் ஈடுபட்ட தமிழ் கைதிகளும் சிறைகளில் உள்ளார்கள். இளைஞர்களாக இருக்கும்போது கைது செய்யப்பட்டு, தம் வாழ்நாளில் கணிசமான காலத்தை இவர்கள் சிறையில் கழித்துள்ளார்கள். அவர்களில், தீர்ப்பு வழங்கப்பட்டவர்களும், விசாரணை கைதிகளும், வழக்குகளை எதிர்நோக்குகின்றவர்களும் உள்ளார்கள். அவர்களும் சீர்திருந்தி, புனர்வாழ்வு பெற்று, சமூகத்துக்குள் சென்று, தம் குடும்பங்களுடன், மனைவி மக்களுடன் வாழ விடுதலை வழங்கப்பட வேண்டும் எனவும் கோருகிறேன்.


யார் என்ன சொன்னாலும், பெரும்பான்மை இனத்தை சார்ந்த தீர்ப்பு வழங்கப்பட்ட மற்றும் விசாரணை கைதிகளுக்கான பொது மன்னிப்பு, விடுதலை என்பவை நடந்து கொண்டு தான் இருக்கின்றன. அவற்றை மனித உரிமையாளர்களும், சர்வதேச சமூகமும் வேடிக்கை பார்த்து கொண்டுதான் இருக்கின்றன.

எனவே, இவ்விவகாரம், தமிழ் கைதிகளின் பிரச்னையையும் தேசிய அரங்குக்கு கட்டாயமாக கொண்டு வரும் எனவும் எதிர்பார்க்கின்றேன். இந்நிலையில், தமிழ் அரசியல்வாதிகளும், மனித உரிமையாளர்களும், இதை பயன்படுத்தி, நீண்டகால, தமிழ் கைதிகளின் பிரச்னையையும் முன்னெடுக்க வேண்டும். அதற்கு எப்போதும் போல் நாம் ஒத்துழைப்பு வழங்குவோம்- என்றுள்ளது. (எ)

உலகச் செய்திகள்

# இந்தியாவும் அமெரிக்காவும் இணைந்து சீன அச்சுறுத்தல்களை எதிர்கொள்வோம்

## புதுடில்லியில் தெரிவித்தார் அமெரிக்க செயலர்



புதுடில்லி, ஒக். 27

**பாதுகாப்பு மற்றும் சுதந்திரத்திற்கு சீனாவிடம் இருந்து வரும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள அமெரிக்காவும் இந்தியாவும் ஒன்றிணைந்து செயல்படவேண்டும் என்று அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் மைக் பொம்பியோ நேற்று புதுடில்லியில் வைத்துத் தெரிவித்துள்ளார்.**

இந்தியத் தலைவர்களுடனான சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்திய - சீன எல்லைப் பகுதியில், இரு நாட்டுப் படைகளுக்கும் இடையில் இடம்பெற்ற மோதலையடுத்து ஏற்பட்டுள்ள பதற்றங்களுக்கு மத்தியில் அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் மைக் பொம்பியோ இந்தியா வந்துள்ளார். "எங்களைப் போன்ற இரண்டு பெரிய ஜனநாயக நாடுகள் இன்னும் அதிகமாக நெருக்கமாக இணைந்து செயல்படவும் வளர்ச்சியடையவும் தற்போது புதிய வாய்ப்பு உருவாகியுள்ளது. நிச்சயமாக இன்னும் நிறைய வேலைகள் உள்ளன.

வுஹானில் தோன்றிய தொற்று நோயை எதிர்கொள்வதில் எங்கள் ஒத்துழைப்பு, சீன கம்யூனிஸ்ட் கட்சியின் பாதுகாப்பு மற்றும் சுதந்திரத்திற்கான அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளுதல், பிராந்தியமெங்கும் அமைதி மற்றும் ஸ்திரத் தன்மையை மேம்படுத்துதல் உள்ளிட்ட விடயங்கள் குறித்து பேசினோம்.

அமெரிக்கா இந்தியாவுக்கு ஏவுகணைகள் மற்றும் நவீன ரக சிறிய ஆளில்லா விமானங்களை வழங்குதல் மற்றும் அமெரிக்காவின் செயற்கைக்கோள் மற்றும் வரைபடத் தரவை இந்தியா அணுகுவதற்கான வாய்ப்பை வழங்குதல் போன்ற ஒப்பந்தங்களும் நேற்று இடம் பெற்றன.



## ஆபிரிக்க நாடுகளுக்கு 270 தொன் உணவு

புதுடில்லி, ஒக். 28

ஆபிரிக்க நாடுகளுக்கு 270 மெட்ரிக் தொன் உணவுப் பொருட்களை இந்தியா அனுப்பி வைத்துள்ளது.

ஆபிரிக்க நாடுகளில் மக்கள் இயற்கை பேரிடர் மற்றும் கொரோனா பாதிப்பு ஆகியவற்றால் பெரிதும் இன்னல்களுக்கு ஆளாகி உள்ளனர்.

இதையடுத்து, சூடான், தென் சூடான், டிஜிபவுட்டி மற்றும் எரித்ரியா ஆகிய ஆபிரிக்க நாடுகளுக்கு இந்தியா சார்பில் அரிசி, கோதுமை, சீனி உள்ளிட்ட மொத்தம் 270 மெட்ரிக் தொன் உணவு பொருட்கள் அனுப்பி வைக்கப் பட்டுள்ளன.

# சீனாவின் கொரோனா தடுப்பூசி இஸ்ரேல் புலனாய்வு பிரிவிடம்!

டெல்அவிவ், ஒக். 28

இஸ்ரேலிய புலனாய்வு அமைப்பான மொசாட் சீனாவின் கொரோனா வைரஸ் தடுப்பூசியை "ஆய்வுக்காக" கொண்டு வந்துள்ளது என்று அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.


ஒழுங்குமுறை ஒப்புதல் பெற்ற பின்னர் நவம்பர் முதலாம் திகதி பாதுகாப்பு அமைச்சின் மேற்பார்வையில் மனித சோதனைகள் தொடங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இது குறித்து சுகாதார அமைச்சின் மூத்த அதிகாரி ஒருவர் கூறுகையில்:

"திரைக்குப் பின்னால் பல இராஜதந்திர முயற்சிகள் நடந்து வருகின்றன. இஸ்ரேலிய குடிமக்களுக்கு விரைவில் ஒரு தடுப்பூசி கிடைப்பதை உறுதி செய்ய எங்களால் முடிந்த அனைத்தையும் நாங்கள் முயற்சிக்கிறோம்", என்றார்.

இஸ்ரேல் உயிரியல் ஆராய்ச்சி நிறுவனம் (ஐ.ஐ.பி.ஆர்) மார்ச் மாதத்தில் அதன் தடுப்பூசி சோதனைகளை விலங்குகளில் தொடங்கியது. இதன் அடுத்த கட்டமாக 80 தன்னார்வலர்களுக்கு தடுப்பூசி செலுத்தப் படும். இரண்டாவது கட்டம், டிசம்பரில் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, இதில் 18 வயதுக்கு மேற்பட்ட 960 பேர் கலந்து கொள்வார்கள்.

இதில் வெற்றி பெற்றால் 30,000 தன்னார்வலர்களில் பரிசோதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)



# நிலவில் தண்ணீர்?

நியூயோரக், ஒக். 28

நிலவில் சூரிய ஒளி மேற்பரப்பில் தண்ணீர் இருப்பதாக நாஸா கூறியுள்ளது.

இது பற்றி அது வெளியிட்டுள்ள தகவலில் "சந்திரனின் தெற்கு அரைக்கோளத்தில் அமைந்துள்ள பூமியிலிருந்து தெரியும் மிகப்பெரிய பள்ளங்களில் ஒன்றான "கிளாவியஸ்" பள்ளத்தில் நீரின் மூலக்கூறுகளை சோபியா ரோவர் கண்டறிந்துள்ளது", என்று கூறப்பட்டுள்ளது.

மேலும், சந்திரனின் சூரிய ஒளி மேற்பரப்பில் நீர் இருப்பதை கண்டுபிடித்துள்ளது, இது அதிகளவில் இருக்கலாம் என கணிக்கப் பட்டுள்ளது. (ஐ)



## பாகிஸ்தானில் குண்டுவெடிப்பு; 7 பேர் பலி!

கராச்சி, ஒக். 28

பாகிஸ்தானில் பள்ளி வாசல் அருகே இடம்பெற்ற குண்டுவெடிப்பில் மாணவர்கள் உட்பட 7 பேர் பலியாகினர். 70 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

பாகிஸ்தானின் வடமேற்குப் பகுதியில் பெஷாவர் நகரில் நேற்று இந்தக் குண்டுவெடிப்பு இடம் பெற்றது.

இந்தக் குண்டுவெடிப்பில் படுகாயமடைந்தவர்களின் எண்ணிக்கை அதிகம் என்பதால், இறப்பு எண் ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று பொலிஸார் அச்சம் தெரிவித்தனர்.

# சீனாவில் மீண்டும் தொற்று: 137 பேருக்கு உறுதியானது

பீஜிங், ஒக் 28

சீனாவில் 137 பேருக்கு கொரோனா தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

சீனாவின் வடமேற்கு பகுதியில் உள்ள ஜின்ஜியாங் மாகாணம் காஷ்கர் நகரில் ஆடை தொழில்சாலையில் வேலை பார்க்கும் இளம்பெண் ஒருவருக்கு அறிகுறிகளே இல்லாமல் கொரோனா தொற்று கடந்த சனிக்கிழமை உறுதி செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து அந்த இளம் பெண்ணுடன் தொடர்பில் இருந்தவர்களை பரிசோதனை செய்ததில் 137 பேருக்கு எந்த அறிகுறியும் இல்லாமல் கொரோனா தொற்று இருப்பது கண்டறியப்பட்டது.

இது கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியதை தொடர்ந்து காஷ்கர் நகரின் மொத்த மக்கள் தொகையான 47 லட்சம் பேருக்கும் 3 நாட்களில் கொரோனா பரிசோதனை செய்ய மாகாண அரசு முடிவு செய்தது. இதற்காக நகரம் முழுவதும் பல்வேறு இடங்களில் கொரோனா பரிசோதனை மையங்கள் திறக்கப்பட்டு இரவு, பகலாக பரிசோதனை நடந்து வருகிறது.

நேற்று முன்தினம் மதியம் வரை 28 லட்சம் பேருக்கு கொரோனா பரிசோதனை நடத்தி முடிக்கப் பட்டுள்ளதாகவும், அவர்கள் அனைவருக்கும் தொற்று இல்லை என்பது உறுதி செய்யப் பட்டிருப்பதாகவும் தேசிய சுகாதார ஆணையம் தெரிவித்துள்ளது. (ஐ)



# ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக தடுப்பூசி நவம்பரில் கிடைக்கும்



லண்டன், ஒக். 28

"ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் கொரோனா தடுப்பு மருந்து நவம்பர் மாதம் கிடைக்கும்", என்று லண்டன் மருத்துவமனை தெரிவித்துள்ளது.

இதுகுறித்து லண்டனின் "சன்" நாளிதழ், "லண்ட னின் புகழ்மிக்க மருத்துவமனை ஒன்றின் முக்கிய ஊழியர், ஒக்ஸ்போர்ட் தடுப்பு மருந்து நவம்பர் மாதம் தயாராகிவிடும் என்று உறுதியாகத் தெரிவித்துள்ளார். இரண்டு வாரத்தில் தடுப்பு மருந்து கிடைக்கும்" என்று தெரிவித்திருக்கிறது.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் ஜென்னர் நிறுவனம், அஸ்ட்ராஜெனகா நிறுவனம் இணைந்து கொரோனா தடுப்பு மருந்தைக் கண்டுபிடித்து, பல்வேறு நாடுகளில் பரிசோதனையை மனிதர்களுக்கு நடத்தி வருகின்றன.

இதில் மூன்றாம் கட்ட பரிசோதனையில் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் ஈடுபட்டுள்ளது. இந்த நிலையில் அதன் முடிவுகள் நல்ல செய்தியாகவே உள்ளன என்று சில நாட்களுக்கு முன்னர் தகவல் வெளியானது. இந்த நிலையில் அமெரிக்கா, பிரிட்டன், சீனா உள்ளிட்ட சில நாடுகளில் கொரோனா தடுப்பு மருந்துகள் இறுதிக்கட்ட சோதனையை நெருங்கியுள்ளன. (ஐ)

# நாட்டை முற்றாக முடக்குவதில்லை

## அமைச்சரவையில் தீர்மானம்

கொழும்பு, ஒக். 28

**கொரோனா வைரஸ் தொற்று பரவலை கட்டுப்படுத்துவதற்காக நாட்டை முழுமையாக முடக்குவதில்லை என அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் தொடர்பாக அமைச்சரவை ஆராய்ந்ததுடன், ஜனாதிபதி இது குறித்து அமைச்சர்களுக்கு தெளிவுபடுத்தியுள்ளார்.

மேலும், கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக, சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி வழமையான பொருளாதார நடவடிக்கைகள் தொடருவதற்கு அனுமதிப்பது எனவும் அமைச்சரவையில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த முறையை விட இம்முறை கொரோனா வைரஸ் பரவல் வேகமாக உள்ளது எனவும் அமைச்சரவையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் மக்கள் அனைவரும் சுகாதார அதிகாரிகளினால் முன்மொழியப்பட்ட சுகாதார நடைமுறைகளை பின்பற்றி வாழ்வதே சிறந்த தீர்வு எனவும் அமைச்சரவை வலியுறுத்தியுள்ளது.



# கொழும்பில் தெரிவு செய்யப்பட்ட சில பகுதிகளில் பி.சி.ஆர். சோதனை

கொழும்பு, ஒக் 28

கொழும்பில் தெரிவு செய்யப்பட்ட சில பகுதிகளில் நேற்று செவ்வாய்க்கிழமை பி.சி.ஆர். சோதனை மேற்கொள்ளப்பட்டது.

மட்டக்குளி சமித்புர, தெமட்டகொடை, பொரளை, சுவர்ணா வீதி, வைத்தியா வீதி ஆகிய பகுதிகளில் பி.சி.ஆர். சோதனை மேற்கொள்ளப்பட்டதாக கொழும்பு மாநகர சபையின் தொற்றுநோய் தடுப்புப் பிரிவின் வைத்தியர் தினுகா குருகே குறிப்பிட்டார்.

கொழும்பு நகரில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். சோதனையூடாக கொரோனா தொற்று உறுதியான 200 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டனர் என அவர் கூறினார்.

# 4 மணித்தியாலத்துக்கு மாத்திரமே ஒரு முகக் கவசத்தை அணியலாம்

கொழும்பு, ஒக் 28

ஒரு முகக்கவசத்தை ஆகக் கூடியது 4 மணித்தியாலத்துக்கு மாத்திரமே அணிந்திருக்க வேண்டும். அதன்பின்னர் புதிய முகக்கவசத்தை அணிவது அவசியமென சுகாதார மேம்பாடு அலுவலகத்தின் சமூக சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக சுகாதார மேம்பாடு அலுவலகத்தின் சமூக சுகாதார பிரிவின் விசேட வைத்தியர் உத்பலா அமரசிங்க மேலும் கூறியுள்ளவை வருமாறு:

தொழில் நிமித்தம் வெளியில் செல்வோர் அல்லது வேறு தேவைகளுக்காக வெளியே செல்வோர் ஒரு முகக்கவசத்தை 4 மணித்தியாலமே பயன்படுத்த வேண்டும்.

எனவே, வெளியே செல்லும் போது, மேலதிகமாக 2 முகக் கவசங்களை கொண்டு செல்லுவது சிறந்தது.

அதன்பின்னர், புதிய முகக் கவசத்தையே கட்டாயம் அணிய வேண்டும். மேலும் முகக்கவசங்களை ஆங்காங்கே வீசுவதனாலும் கொரோனா தொற்று பரவுவதற்கு அதிக வாய்ப்பு உள்ளது.

முகக்கவசங்களை அணியும் போது மூக்கு, வாய் என்பவற்றை நன்றாக மூடும் வகையில் அணிய வேண்டும் - என்றார்.

## விசேட அதிரடிப்படையினர் உட்பட

# பொலிஸ் அதிகாரிகள் 17 பேருக்கு கொரோனா

கொழும்பு, ஒக் 28

பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் உட்பட பொலிஸ் அதிகாரிகள் 17 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இவர்களில் 10 பேர், பொலிஸ் விசேட அதிரடிப்படையை சேர்ந்தவர்கள் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இதனால் சுமார் 400 பொலிஸ் அதிகாரிகள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன் மேலும் சிலர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருக்கலாமென்ற சந்தேகத்தின் பேரில், இதுவரை சுமார் 35,000இற்கு மேற்பட்டோர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் அஜித் ரோஹண மேலும் கூறினார்.

# தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை

கொழும்பு, ஒக் 28

தனிமைப்படுத்தல் விதி முறைகளை மீறிச் செயற்படும் பொது மக்களுக்கு எதிராகக் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கொரோனா அச்சுறுத்தலான சூழ்நிலை நாட்டில் ஏற்பட்டுள்ளமையால் தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில் இந்த தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகள் மீறி பெரும்பாலானோர் செயற்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையிலேயே அஜித் ரோஹண இவ்வாறு மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கடந்த தினங்களில் பொதுப் போக்குவரத்தில் உரிய முறைமையில் தனிமைப்படுத்தல் ஒழுங்குவிதிகள் பின்பற்றப்படவில்லை.

பொது இடங்களிலும், வரிசைகளிலும் தனிமைப்படுத்தல் ஒழுங்குவிதிகளை பொதுமக்கள் பின்பற்றாத நிலைமையை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

பொதுமக்கள் தொடர்ந்தும் இவ்வாறாக செயல்படுவார்களாயின் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

# சிலிண்டர்களை ஏற்றிச்சென்ற லொறி விபத்து

பதுளை,ஒக்.28

பதுளையிலிருந்து மஹியங்கனை நோக்கி எரிவாயு சிலிண்டர்களை ஏற்றிச்சென்ற லொறி விபத்துக்குள்ளானதில் ஐவர் படுகாயமடைந்தனர்.

இந்த வாகனம் நேற்றுப் பிற்பகல் 3 மணியளவில் துன்ஹிந்த பகுதியில் சுமார் 80 அடி பள்ளத்தில் குடைசாய்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் ஐவர் படுகாயமடைந்த நிலையில் பதுளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (எ)

# தமிழ் அரசியல் கைதிகள் நினைவில் வரவில்லையா?

## முன்னாள் எம்.பி. கேள்வி

கொழும்பு,ஒக்.28

சிறையில் வாடும் நூற்றுக்கணக்கான தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யக் கோரி ஜனாதிபதியிடம் ஒரு மனுவை சமர்ப்பிக்க முன்னின்று செயல்பட வேண்டிய தரப்பினர், ஆளும் தரப்பினருடன் சேர்ந்து அவர்களது சகா ஒருவரை விடுதலை செய்ய நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தக் கோருவது வெட்கக்கேடானது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம். திலகராஜ் தெரிவித்துள்ளார்.

கொலைக் குற்றத்துக்காக மரண தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு பொதுமன்னிப்பு வழங்கக் கோரிய ஆளுந்தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்களோடு 20ஐ எதிர்த்து வாக்களித்த தமிழ் முற்போக்குக் கூட்டணி எம்.பிக்கள் ஐவரும் கையொப்பமிட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் திலகராஜ் ஊடகங்களுக்கு விடுத்திருக்கும் அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:

"மரண தண்டனைக் கைதிகளுக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்குவது இதற்கு முன்பும் நடந்திருக்கிறது. ஆனால் துமிந்த சில்வாவுக்கு பொதுமன்னிப்பு வழங்கக் கோரி ஜனாதிபதிக்கு அனுப்பப்படும் கோரிக்கை மனுவில் தமிழ் முற்போக்கு கூட்டணி கையொப்பமிட்டுள்ள தருணம் ஆச்சரியத்தையும் சந்தேகத்தையும் ஏற்படுத்துவதாக உள்ளது.

காரணம், ஆளும்தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்களே இந்தக் கோரிக்கை மனுவைத் தயார் செய்து கையொப்பமிட்டுள்ளனர். ஆளும்தரப்பில் ஏற்கனவே 157 பேர் உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் எதிர்த்தரப்பு எம்.பிக்களான தமிழ் முற்போக்கு கூட்டணியின் 5 உறுப்பினர்களும் கைச்சாத்திட்டதால் அந்த எண்ணிக்கை 160ஐ கடந்துள்ளது.

160 பேர் ஒப்பமிட்டதால் தான் நாங்களும் கையொப்பம் இட்டோம் என்பது சிறுபிள்ளைத் தனமானது. எந்த 'எண்ணிக்கை' அடிப்படையில் இந்தத் தீர்மானத்தை எடுத்திருக்கலாம் என்பதும் இப்போது கசிந்துள்ளது.

20இன் உள்ளடக்கம் வேறு இந்தக் கோரிக்கை வேறு என இப்போது சப்பைக்கட்டு கட்டலாம். இந்தக் கோரிக்கையை எந்த ஜனாதிபதியிடம் முன்வைக்கிறீர்கள்? 20ஐ நிறைவேற்றுவதன் மூலம் சர்வாதிகாரியாக மாற்றப்படுவார் என நீங்கள் கூக்குரலிட்ட ஜனாதிபதியிடம்தானே? அவருக்கு எதிராக வாக்களித்துவிட்டு இப்போது அவரிடமே போய் ஒரு கொலைக் குற்றவாளி, அதுவும் ஐந்து நீதிபதிகள் கொண்ட நீதி ஆயத்தால் தீர்ப்பளிக்கப்பட்ட விடயத்தில் அத்தகைய நீதிமன்றத்தின் தீர்ப்பை கேள்விக்கு உட்படுத்தும் ஜனாதிபதியின் அதிகாரங்களைப் பயன்படுத்தக் கோருவதற்கு வெட்கப்பட வேண்டாமா?

கூட்டணியின் பதுளை மாவட்ட எம்.பி 20இற்கு ஆதரவாக வாக்களித்தமையை அவர் என்ன நியாயத்தைச்சொன்னாலும் ஏற்கமுடியாது. அதேநேரம் வாக்களித்த அவருக்கு எதிராக உடனடியாக நீக்கல் உத்தரவைப் பிறப்பித்தவர்கள் அவர்களது கட்டளைத் தீர்மானத்தின் ஈரம் காய முன்னர் அந்த 20இன் அதிகாரங்களைப் பயன்படுத்தக் கோரும் மனுவில் கையொப்பம் இட்டதை எப்படி நியாயப்படுத்த முடியும்?

குற்றவாளியான முன்னாள் எம்.பி. துமிந்த திருந்திவாழ வாய்ப்பு வழங்கப்பட வேண்டுமாம். அப்படியாயின், கொலைக்குற்றம் அளவுக்கு இல்லாது தமது கூட்டணி தீர்மானத்துக்கு மாறாக ஒரு வாக்கை வழங்கி அரசாங்கத்துக்கு ஆதரவு தெரிவத்த அரவிந்தகுமார் எம்.பியும் திருந்த ஒரு வாய்ப்பு வழங்கப்படலாமே!

ஆக, அரவிந்தகுமாரின் திரையை அவசரமாக விலக்கப்போய் தமது முகத்திரைகளை முழுமையாக கிழித்துக் கொண்ட சந்தர்ப்பமாக இந்த மனு மீதான கூட்டணியின் கையொப்பம் அமைந்துவிட்டது - என்றுள்ளது. (எ)

செய்திகள்

# எந்த நாட்டு பிரதிநிதியையும் இலங்கை வரவேற்க தயார்

## அமைச்சர் நாமல் கூறுகிறார்

**அநுராதபுரம், ஒக்.28**

**அரசாங்கம் அணிசேராக் கொள்கையைப் பின்பற்றுகின்றது. இதனால் எந்த வெளிநாட்டுப் பிரதிநிதியை வேண்டுமானாலும் வரவேற்கத் தயாராகவுள்ளது என அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**



அநுராதபுரத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சியினருக்கு அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுக்க பல தேவைப்பாடுகள் உள்ளன. இதனால் அமெரிக்காவுடனான அவர்களது உறவு தொடர்பில் உறுதியான நிலைப்பாட்டை முன்வைக்காமல் மைக் பொம்பியோவின் விஜயத்தை எதிர்க்கின்றனர்.

முன்னைய அரசாங்கத்தின் காலத்திலும் மைக் பொம்பியோ இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டார். அவ்வேளை ஆட்சியிலிருந்தவர்கள் அமெரிக்கா, ராஜபக்ஷ அரசாங்கத்தை மதிக்காது என்று கூறினர்.

இலங்கை அணிசேராக் கொள்கையைப் பின்பற்றுவதாலேயே அவர் மீண்டும் இலங்கை வந்திருக்கிறார்.

அமெரிக்க வெளிவிவகாரச் செயலாளர் வருகையும் சீனக் குழுவினரின் வருகையும் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கைகளை வெளிப்படுத்தியுள்ளது- என்றார். (எ)

# உப்பு விலை அதிகரிப்பு

**கொழும்பு,ஒக்.28**

திடீரென ஏற்பட்ட உப்பு விலை அதிகரிப்பைக் குறைக்க கடல்தொழில் அமைச்சர் டகள்ஸ் தேவானந்தா நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

மாந்தை உப்பு நிறுவனத்தால் விலை அதிகரிப்பு தொடர்பான அறிவித்தல் நேற்று வெளியிடப்பட்ட நிலையில் விலை அதிகரிப்பால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் தொடர்பில் பிரதேச மக்களால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது.

இதனையடுத்து, கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்ஷவுடன் உப்பு விலை அதிகரிப்பு தொடர்பில் கலந்துரையாடிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இதுவரை காலமும் 50 கிலோகிராம் உப்பு மூடை 675 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டு வந்த நிலையில் தற்போது மாந்தை உப்பு நிறுவனத்தால் 950 ரூபா விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளமையை தெரியப்படுத்தியதுடன் மக்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் தொடர்பில் தெளிவு படுத்தினார்.

கடலுணவு விளைச்சல் அதிகளவில் காணப்படுகின்ற நிலையில் கொரோனா தொற்று அச்சத்தால் அவற்றை ஏற்றுமதி செய்யவோ, விற்பனை செய்யவோ முடியாத சூழல் காணப்படுகின்றது - என்றார்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கருத்துக்களை ஏற்றுக் கொண்ட அமைச்சர் விமல் வீரவன்ஷ, சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் கலந்துரையாடி உப்பு விலையைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்துள்ளார். (எ)

# இலங்கையிலுள்ள வெளிநாட்டவர்களின் விசா காலம் நீடிப்பு

**கொழும்பு,ஒக்.28**

இலங்கையில் தங்கியுள்ள அனைத்து வெளிநாட்டவர்களின் விசாக் காலம் டிசெம்பர் 05 ஆம் திகதி வரை 60 நாட்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

விசாக் கட்டணம் மற்றும் விசாவைப் பெறுவதற்கான காலம் பின்னர் அறிவிக்கப்படும் என குடிவரவு - குடியகல்வு திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசாவைப் பெற்றுக்கொள்ள குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் விசா பிரிவுக்கு சமுகமளிப்பதை தவிர்த்துக்கொள்ளுமாறு அத்திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளது. (எ)

# தனியார்துறை ஊழியர்களுக்கு டிசெம்பர் மாதம் வரை சம்பளம்

## அமைச்சரவை அங்கீகாரம்

**கொழும்பு,ஒக்.28**

கொரோனா வைரஸ் தொற்று பரவலால் தனியார்த்துறை ஊழியர்களுக்கு ஆக்கூடிய சம்பளத்தை வழங்கும் முறையை எதிர்வரும் டிசெம்பர் மாதம் வரையில் நீடிக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு சூம் செயலி மூலம் அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது அமைச்சரவை இணைப்பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண இது தொடர்பில் மேலும் தெரிவித்தவை வருமாறு: நாட்டில் தற்போது கொரோனா வைரஸ் தொற்றால் ஏற்பட்டுள்ள நிலைமை தொடர்பில் அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து தனியார்த்துறை ஊழியர்கள் சம்பளம் தொடர்பில் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதற்கென ஏற்கனவே அமைக்கப்பட்ட செயலணிகளால் நடைமுறைப்படுத்தப்பட்ட சம்பள நடைமுறையை இவ்வருடம் செப்ரெம்பர் மாதம் தொடக்கம் டிசெம்பர் மாதம் வரை நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இதற்கான கோரிக்கையை அரசாங்கம் தனியார்த்துறையினருக்கு விடுத்துள்ளது.

இது தொடர்பில் அமைச்சரவையில் மேற்கொண்ட தீர்மானம் வருமாறு.

கொரோனா வைரஸ் தொற்றால் ஏற்பட்டுள்ள சூழ்நிலையால் தனியார்த்துறைப் ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கல் தொடர்பில் உடன்பாடு தெரிவித்த காலப் பகுதியை நீடித்தல்.

கொரோனா வைரஸ் தொற்றால் ஏற்பட்டுள்ள சூழ்நிலையால் தனியார்த்துறை ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கல் தொடர்பில் தொழில் வழங்குநர்கள், தொழில்சங்கங்கள், தேசிய தொழிலாளர் ஆலோசனைச் சபை, தொழில் அமைச்சு மற்றும் தொழில் திணைக்களம் ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தி செயலணி அமைக்கப்பட்டுள்ளது. இந்தச் செயலணியால்:

- கொரோனா வைரஸ் தொற்றால் வேலை நிறுத்தப்பட்டுள்ள நிறுவனங்களில் ஊழியர்களைத் தொழிலிலிருந்து நீக்காமல் இருத்தல்

- சமூக இடைவெளியைப் பேண வேண்டியிருப்பதால், நிறுவனத்தின் அனைத்து ஊழியர்களையும் பணியில் அமர்த்த முடியாது என்றால் ஊழியர்களை நேரசூசி அடிப்படையில் அல்லது வேறு பொருத்தமான முறைகளைப் பயன்படுத்தி சமமாகப் பணிபுரியும் வகையில் பணியில் அமர்த்துதல்.

- வேலை இல்லாததால் ஊழியர்கள் வீட்டில் தங்கியிருக்க நேரிடுவதால், நிறுவன ஊழியர்களுக்கு இறுதியாகச் செலுத்தப்பட்ட மாதாந்த மொத்தச் சம்பளத்தின் அடிப்படைச் சம்பளத்தின் 50 வீதம் அல்லது ரூபா 14,500 இரண்டிலும் மிகவும் நன்மையான தொகையை செலுத்தல்.

- அவ்வாறு செலுத்தும் சம்பளத்துக்கு தொழில் வழங்குநரால் ஊழியர் சேமலாப நிதியத்துக்கான செலுத்தல்களை மேற்கொள்ளல்.

கொரோனா வைரஸ் தொற்று நாட்டில் தற்போது வேகமாகப் பரவிவரும் நிலையில் இவ்வருடம் டிசெம்பர் மாதம் வரை இவ்வாறான செயல்பாடுகளை முன்னெடுக்க இந்தச் செயலணி உடன்பாடு தெரிவித்துள்ளது என தொழில் அமைச்சர் முன்வைத்த விடயங்கள் அமைச்சரவையின் கவனத்தில் கொள்ளப்பட்டது. (எ)

# நாட்டு நலன்களை பொருட்படுத்தாமல் உலக வல்லரசுகளுடன் அரசு நெருக்கம்

## குற்றம் சாட்டுகின்றது ஜே.வி.பி.

**கொழும்பு, ஒக்.28**

நாட்டின் நலன்களைப் பொருட்படுத்தாமல் அரசு உலக வல்லரசுகளுடன் நெருக்கமாகச் செயல்பட்டு வருவதாக மக்கள் விடுதலை முன்னணி குற்றம் சாட்டியுள்ளது.

உள்நாட்டு விவகாரங்களில் அமெரிக்காவின் தலையீட்டுக்கு எதிர்ப்பை வெளியிட்டே கொழும்பில் போராட்டம் நடத்தியதாக அந்தக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபயவும் அரசும் வெளிக் கட்சியின் நிகழ்ச்சி நிரலின் படி செயற்படுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

மிலேனியம் சவால்கள் ஒப்பந்தத்தின் தலைவராக அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியோ இருக்கும் நிலையில் அவரது வருகை மிலேனியம் சவால் ஒப்பந்தத்தில் கையெழுத்திட வழி வகுக்கும் என்றும் நளிந்த ஜயதிஸ்ஸ சுட்டிக்காட்டினார்.

அதேநேரத்தில் நாட்டினதும் நாட்டு மக்களின் நலன்களைப் பாதுகாப்பதற்குப் பதிலாக மிலேனியம் சவால் ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவது குறித்து அரசு விவாதங்களை நடத்தி வருவதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

எனவே, இலங்கையின் இறையாண்மையைப் பாதுகாக்க மக்கள் விடுதலை முன்னணி தன்னால் முடிந்த அனைத்தையும் செய்யும் என்றும் நளிந்த ஜயதிஸ்ஸ குறிப்பிட்டார்.

# வழிகாட்டல்களை கடைப்பிடித்தால் வைரஸ் தொற்றுக்கு வாய்ப்பில்லை

## அஜித் ரோஹண தெரிவிப்பு



**கொழும்பு,ஒக்.28**

பொதுமக்கள் சுகாதார வழிகாட்டல்களைக் கடைப்பிடித்தால் கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட வாய்ப்பில்லை என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

கம்பஹா மாவட்டத்தில் 14 மணித்தியாலங்கள் ஊரடங்கு தளர்த்தப்பட்டபோது, பொது மக்களின் நடவடிக்கைகள் தொடர்பில் வருத்தமளிக்கிறது என அவர் தெரிவித்தார்.

'உண்மையில் இந்த தொற்று நோய் ஏற்படாது என்பதற்கு சிறந்த உதாரணம் ஐ.டி.எச்.வைத்தியசாலை. முதல் கொரோனா நோயாளர் கடந்த மார்ச் மாதம் 11ஆம் திகதி இனம்காணப்பட்டார். அவர் சிகிச்சைக்காக ஐ.டி.எச். வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அன்று முதல் பலர் அங்கு சேர்க்கப்பட்டனர். இன்றைய தினத்தில் வைத்தியசாலைகளின் எண்ணிக்கை 28 ஆக அதிகரித்துள்ளது. ஆனால், அநேகமானோர் ஐ.டி.எச். வைத்திய சாலையிலேயே சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

எனக்கு சுகாதாரப் பிரிவினர் அறிவித்ததன் படி, நேற்று முன்தினம் வரையில் ஐ.டி.எச். வைத்தியசாலையில் எந்தவொரு ஊழியருக்கும் கொரோனா தொற்று ஏற்படவில்லை. இதன் இரகசியம் என்ன? புதிதாக ஒன்றுமில்லை. அதுதான் முகக்கவசம் அணிதல், கைகளை சுத்தமாக வைத்திருத்தல், அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் சமூக இடைவெளியைக் கடைப்பிடித்தலாகும். அங்கு தான் அநேகமான கொரோனா நோயாளிகள் உள்ளனர். எனினும் ஒரு ஊழியருக்குக்கூட கொரோனா பரவவில்லை. எனவே, சுகாதார வழிகாட்டல்களைக் கடைப்பிடித்தால் கொரோனா பரவலைத் தடுத்தல் சாத்தியமானது"-என்றார். (எ)

செய்திகள்

# குருநகர், பாஷையூர் சந்தைகளுக்குள் விவரங்களை பதிந்தே செல்ல முடியும்

## இன்றுமுதல் நடைமுறை என்கிறார் மாநகர முதல்வர்



யாழ்ப்பாணம், ஒக். 28

**‘குருநகர், பாஷையூர் பகுதி மற்றும் மீன் சந்தைகளில் இன்று முதல் சுகாதார நடைமுறைகள் இறுக்கமாகமாக நடைமுறைப்படுத் தப்படும். சந்தைக்குள் செல்பவர்கள் பெயர் விவரங்களை பதிந்தே செல்ல முடியும். இவற்றை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக் கப்படும்”, என்று யாழ்ப்பாணம் மாநகர முதல்வர் இமானுவேல் ஆனல்ட் அறிவித்துள்ளார்.**

நேற்றைய தினம் அவர் நடத்திய ஊடக சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

குருநகர் பகுதியில் இருவருக்கு கொரோனா தொற்று நேற்று முன்தினம் உறுதிப்படுத்தப்பட்டது. எனவே, யாழ்ப் பாணம் மாநகர எல்லையில் பொதுமக்கள் இனிவரும் நாள்களில் மிகவும் அவதானமாக செயல்பட வேண்டியது அவசியம்.

குருநகர், பாஷையூர் பகுதிகள் மற்றும் மீன் சந்தைகளில் சுகாதார நடைமுறை கள் பொலிஸார் மற்றும் சுகாதார பிரிவினரால் இறுக்கமாக நடை முறைப்படுத்தப்படும். அங்கு வருபவர்கள் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி செயல்படுவது அவசியம்.

இந்த நடைமுறை இன்று காலை முதல் நடைமுறைக்கு வரும். பொதுமக்கள் இந்த விடயம் தொடர்பில் அவதானமாக செயல் படவேண்டும். நடைமுறைகளை மீறு வோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ஐ)

# ரிஷாத் எம்.பிக்கு தொடர்ந்தும் விளக்கமறியல்


கொழும்பு, ஒக். 28

பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனுக்கு எதிர்வரும் நவம்பர் 10ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டுள் ளது. கொழும்பு கோட்டை நீதி வான் நீதிமன்றத்தில் அவர் நேற்று முற்படுத்தப்பட்ட போதே நீதிவான் இந்த உத்தரவை வழங்கினார்.

ரிஷாத் பதியுதீனின் சட்டத்தரணிகள் அவருக்கு பிணை வழங்குமாறு கோரினர். ஆனால், அரச சட்டத்தரணிகள் அதற்கு மறுப்புத் தெரிவித்த நிலையில் நீதிவான் பிணை வழங்க மறுத்துவிட்டார்.

கடந்த ஜனாதிபதி தேர் தலின்போது அரசாங்கத்திற்கு சொந்தமான 95 இலட்சம் ரூபாவை முறைகேடாகப் பயன் படுத்தினார் என்ற குற்றத்திற் காக ரிஷாத் எம்.பி. கடந்த 19ஆம் திகதி கைது செய்யப் பட்டார் என்பது குறிப்பிடத் தக்கது. (ஐ)

# மட்டக்களப்பில் ஒருவருக்கு கொரோனா



மட்டக்களப்பு, ஒக். 28

மட்டக்களப்பில் மேலும் ஒருவருக்கு கொரோனா தொற்று நேற்று உறுதிப்படுத் தப்பட்டது. இதுவரை 28 தொற்றாளர்கள் மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர் என்று கிழக்கு மாகாண சுகா தார பணிப்பாளர் மருத்துவர் ஏ.லதாகரன் தெரிவித்தார்.

தொற்றுக்கு இலக்கான மொறக்கொட்டாஞ்சேனை வாசி கொழும்பு சென்று திரும் பியுள்ளார் என்று பொதுச் சுகா தார அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து அவரை தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தி பி.சி.ஆர். பரி சோதனை நடத்தியபோதே அவருக்குத் தொற்று இருப்பது கண்டறியப்பட்டது.

இதையடுத்து அவர் பய ணித்த பஸ்கள், அவருடன் பயணித்தவர்கள் தொடர்பில் ஆராயப்படுகின்றது என்றும் அவர் கூறினார். (ஐ)



# திடீரென புகுந்த கடல்நீரால் 40 ஏக்கர் நெல் பயிர் அழிவு

கிளிநொச்சி, ஒக். 28

கிளிநொச்சி - கௌதாரி முனையில் தரைப் பகுதிக்குள் கடல்நீர் புகுந்ததால் 40 ஏக்கருக் கும் மேற்பட்ட நெற்பயிர் கள் அழிவடைந்துள்ளன என்று பூந கரி பிரதேச செயலர் எஸ்.கிருஷ் ணேந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் திடீரென கடல் நீர் உட்புகுந்ததாகத் தெரி விக்கப்பட்டது. திடீரென ஏற் பட்ட இந்த இயற்கை மாறு தலால் அப்பகுதி விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

இந்தப் பகுதியில் 100 ஏக் கருக்கும் அதிக நிலத்தில் நெல் பயிரிடப்பட்டுள்ளது. இந் நிலையில் கடல் நீர் உட்புகுந் தமையால் 40 ஏக்கருக்கும் அதிகமான நிலப்பரப்பில் நெற் பயிர்கள் அழிவடைந்தன.

திடீரென ஏற்பட்ட இந்த அனர்த்தம் தொடர்பில் மாவட்ட அனர்த்த முகாமைத் துவப் பிரிவினர் நேரில் சென்று ஆய்வு நடத்தினர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, திடீரென ஏற்பட்ட இந்த நிகழ்வுக்கு இயற்கையாக வேறு பகுதி களில் அனர்த்தம் ஏற்பட்டால் அதன் தாக்கம் ஏற்படக்கூடிய சாத்தியம் உள்ளபோதிலும் அவ்வாறான அனர்த்தம் எது வும் நடைபெற்றதாக தகவல்கள் கிடைக்கப்பெறவில்லை என்று கிளிநொச்சி அனர்த்தமுகாமைத் துவப் பிரிவு தெரிவித்தது.

# புலமைப்பரிசில் விடைத்தாள் திருத்திய ஆசிரியர் திடீர் மரணம்

மட்டக்களப்பு, ஒக். 28

புலமைப்பரிசில் பரீட்சை விடைத்தாளை திருத்திக் கொண்டிருந்த ஆசிரியர் மயங்கி வீழ்ந்து திடீரென மரணமானார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மட்டக்களப்பில் இடம்பெற்றது. இதில் கல்லடி, திருச்செந்தூர், இரண்டாம் குறுக்குத்தெருவை சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான கணபதிப்பிள்ளை ரவீந்திரன் (வயது 52) என்பவரே இவ் வாறு மரணமானார்.

மட்டக்களப்பு ஆனைப் பந்தி வித்தியாலயத்தில் புல மைப் பரிசில் பரீட்சை விடைத் தாள் திருத்தும் பணியில் ஈடுபட்டிருந்த வேளையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள் ளது

மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிவானின் உத்தர வுக்கமைய சம்பவ இடத்துக்குச் சென்ற காத்தான்குடி பிரதேச திடீர் மரண விசாரணை அதி காரி வேலு மணிமாறன் சட லத்தைப் பார்வையிட்ட பின் னர், சடலத்தை பிரேத பரி சோதனைக்கு உட்படுத்துமாறு பணித்தார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப் புப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# இறந்தவர் உயிருடன் எனக்கூறி மருத்துவமனை மீது தாக்குதல்



அச்சுவேலி, ஒக். 28

இறந்தவர் உயிருடன் இருக் கிறார் எனக் கூறிய கும்பலால் அச்சுவேலி மருத்துவமனை தாக் கப்பட்டது. இதனால் அப்பகுதி யில் நேற்று பதற்றம் நிலவியது.

அச்சுவேலியில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற கார் விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். மற்றவர் காயமடைந்தார்.

இருவரும் அம்புலன்ஸ் மூலம் முதலில் அச்சுவேலி மருத்துவமனையில் சேர்க்கப் பட்டனர். சாரதி உயிரிழந்து விட்டார் எனத் தெரிவிக்கப் பட்ட நிலையில், காயமடைந் தவர் யாழ். போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டார்.

இந்நிலையில், மருத்துவ மனைக்கு வந்தவர்கள் உயிரி ழந்தவர் உயிருடன் இருக்கிறார் எனக் கூறி வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதைத் தொடர்ந்து அச்சுவேலி மருத் துவமனையின் வெளிநோயா ளர் பிரிவின் கண்ணாடிகளை அந்தக் கும்பல் அடித்து நொருக்கியது.

தொடர்ந்து அவர்கள் பிரேத அறையையும் உடைத்து உள்ளே நுழைய முற்பட்டனர். இந்த விடயம் குறித்து பொலி ஸாருக்கு அறிவிக்கப்பட்டது. அங்கு வந்த பொலிஸார் முரண் பட்ட கும்பலை அமைதிப்படுத் தினர். இதைத் தொடர்ந்து மருத் துவமனைக்கு பொலிஸ் பாது காப்பு வழங்கப்பட்டது. (ஐ)

# இரணைமடு நன்னீர் மீனவர்கள் ஏற்றுமதியின்மையால் பாதிப்பு

கிளிநொச்சி, ஒக். 28

கிளிநொச்சி இரணைமடு குளத்தின் கீழான நன்னீர் மீன்பிடி தொழிலாளர்கள் மீன் ஏற்றுமதி இன்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி இரணைமடு குளத்தின் கீழ் சுமார் 150 இற்கும் மேற்பட்ட மீனவர்கள் நன்னீர் மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறு நன்னீர் மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்ற மீனவர்கள் தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா தொற்றுப் பரவல் காரணமாக மீன் ஏற்றுமதியின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இரணைமடு குளத்தில் பிடிக்கப்படுகின்ற பெரும்பகுதி மீன்கள் தென் பகுதிக்கே ஏற்றுமதி செய்யப்படுகின்றது. இந்த நிலையில் தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா அச்சம் காரணமாக மீன் ஏற்றுமதி முற்றாக தடைபட்டுள்ளது.

இதனால் இரணைமடு குளத்தின் கீழ் பிடிக்கப்படுகின்றன ஏற்றுமதி செய்ய முடியாத நிலையில் இருப்பதாகவும் இதனால் தங்களுடைய தொழில் நடவடிக்கைகளை குறைத்து குறைந்த அளவிலேயே தற்போது மீனைப் பிடித்து உள்ளூர் வியாபாரிகளுக்கு வழங்கி வருவதாகவும் இரணைமடு நன்னீர் மீன்பிடி தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஈழநாடு
Eelanadu ఈళనాడు

# வோர்ணர் - சஹா அதிரடி: ஹைதராபாத் பெருவெற்றி



டுபாய், ஒக். 28

டில்லி கப்பிட்டல்ஸ் அணியை 88 ஓட்டங்களால் இமாலய வெற்றி பெற்றது ஹைதராபாத் அணி.

ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நடக்கும் ஐ.பி. எல்லின் 13ஆவது தொடரில் நேற்று டுபாயில் நடந்த 47ஆவது போட்டியில் வோர்ணர் தலைமையிலான ஹைதராபாத் சன்ரைசர்ஸ், ஸ்ரேயாஸ் ஐயர் தலைமையிலான டில்லி கப்பிட்டல்ஸ் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற டில்லி கப்பிட்டல்ஸ் அணியின் தலைவர் ஸ்ரேயாஸ் ஐயர் முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தார்.

இதனால், முதலில் துடுப்பெடுத்தாடியது ஹைதராபாத் சன்ரைசர்ஸ். தொடக்கம் கொடுத்த அணியின் தலைவர் வோர்ணரும் ரித்தமான் சஹாவும் சிறப்பான அடித்தளத்தை இட்டனர்.

டில்லியின் பந்து வீச்சாளர்களை அசாதாரணமாகக் கையாண்டார் வோர்ணர். பவர் பிளேக்கு முன்பாக அரைச்சதம் அடித்த முதல் ஐ.பி.எல். வீரர் என்ற சாதனையை அவர் படைத்தார். 25 பந்துகளில் அவர் இந்த சாதனையைப் படைத்தார்.

அவரைத் தொடர்ந்து ஷாவும் தனது அதிரடியான ஆட்டம் மூலம் அரைச் சதம் கடந்தார். இந்நிலையில் 8 பௌண்ரி, 2 சிக்ஸரை விளாசிய வோர்ணர் 34 பந்துகளில் 66 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

இதனால், அதிரடியாக ஆடிய சஹாவுடன் இணை சேர்ந்தார் மனிஸ் பண்டே. இருவரும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். சதம் அடிப்பார் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில் சஹா 12 பௌண்ட்ரி, 2 சிக்ஸருடன் 87 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார்.

20 ஓவர்கள் முடிவில் 2 விக்கெட்களை இழந்த ஹைதராபாத் அணி 219 ஓட்டங்களைப் பெற்றது.

மனிஸ் பண்டே 4 பௌண்ட்ரி, ஒரு சிக்ஸருடன் 44 ஓட்டங்களையும் கேன் வில்லியம்ஸன் 11 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

டில்லியின் பந்து வீச்சில் நோர்ட்ஜே, அஸ்வின் ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

220 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்கு நோக்கித் துடுப்பெடுத்தாடியது டில்லி கப்பிட்டல்ஸ் அணி.

ராயுடு - தவான் இணை தொடக்கம் கொடுத்தது. ஆனால் மூன்றாவது பந்திலேயே முதல் விக்கெட்டை இழந்தது டில்லி. தவான் முதல் பந்திலேயே ஆட்டமிழந்து வெளியேறினார். அடுத்து வந்த ஸ்ரொய்னிஸ் 5, ரஹானே 26, ஹெட்மேயர் 16 ஓட்டங்கள் என ஆட்டமிழந்தனர்.

ரிஷப் பந்த் நிதானமாக ஹைதராபாத்தின் பந்துகளைக் கையாண்டார். ஆனால், மறுமுனையில் எவரும் நிலைத்து ஆடவில்லை. அணித் தலைவர் ஸ்ரேயாஸ் ஐயர் 7, பட்டேல் 1, ரபாடா 3, அஸ்வின் 7, நோர்ட்ஜே 1 என் சொற்ப ஓட்டங்களுடனேயே வெளியேறினர்.

இதனால் 19 ஓவர்களிலேயே டில்லி அணி சகல விக்கெட்களையும் இழந்து 131 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. இதனால் அந்த அணி 88 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

ஹைதராபாத்தின் பந்து வீச்சில் ரஷீத் கான் 3 விக்கெட்களையும், நடராஜன், நதீம் ஆகியோர் தலா 2 விக்கெட்களைக் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக ரித்தமான் சஹா தெரிவானார். (ஐ)

| அணிகள் | போட்டி | வெற்றி | தோல்வி | நிகர ஓட்டம் | புள்ளி |
|---|---|---|---|---|---|
| மும்பை இந்தியன்ஸ் | 11 | 07 | 04 | + 1.252 | 14 |
| பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் | 11 | 07 | 04 | + 0.092 | 14 |
| டில்லி கப்பிட்டல்ஸ் | 12 | 07 | 05 | + 0.030 | 14 |
| கிங்ஸ் லெவன் பஞ்சாப் | 12 | 06 | 06 | - 0.049 | 12 |
| கொல்கத்தா நைற்ரைடர்ஸ் | 12 | 06 | 06 | - 0.479 | 12 |
| ஹைதராபாத் சன்ரைசர்ஸ் | 12 | 05 | 07 | + 0.396 | 10 |
| ராஜஸ்தான் றோயல்ஸ் | 12 | 05 | 07 | - 0.505 | 10 |
| சென்னை சுப்பர் கிங்ஸ் | 12 | 04 | 08 | - 0.602 | 08 |

# ரபாடாவின் தொடர் விக்கெட் மழைக்கு முடிவு

அபுதாபி, ஒக். 28

டில்லி கப்பிட்டல்ஸின் வேகப்பந்து வீச்சாளர் ரபாடா 25 போட்டிகளில் தொடர்ந்து விக்கெட் வீழ்த்திய சாதனைக்கு நேற்று முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

ஐ.பி.எல்லின் 13ஆவது தொடர் ஐக்கிய அரபு எமிரேட்ஸில் நடக்கிறது. இதில் நேற்று நடந்த ஆட்டத்தில் ஹைதராபாத் சன்ரைசர்ஸ், டில்லி கப்பிட்டல்ஸ் அணிகள் மோதின.

டில்லி சார்பில் நேற்று பந்து வீசிய ரபாடா 4 ஓவர்கள் பந்துவீசி 54 ஓட்டங்களைக் கொடுத்தார். இந்த ஆட்டத்தில் அவரால் விக்கெட் எதனையும் கைப்பற்ற முடியவில்லை.

2017 இல் ஹைதராபாத் அணிக்கு எதிராக ஒரு விக்கெட்டையும் ரபாடா வீழ்த்தாமல் இருந்தார். அதற்குப் பின்னர் அவர் பங்கேற்ற 25 போட்டிகளிலும் குறைந்தபட்சம் ஒரு விக்கெட்டையாவது வீழ்த்தி வந்தார்.

இந்நிலையில், மீண்டும் நேற்று ஹைதராபாத் அணிக்கு எதிராக ஒரு விக்கெட்டைக்கூட வீழ்த்த முடியவில்லை. இதன்மூலம் அவரின் தொடர் விக்கெட் வீழ்ச்சி நேற்று முடிவுக்கு வந்தது. (ஐ)



# கப்டனாக தொடர்வாரா டோனி?



சென்னை, ஒக். 28

அடுத்த ஐ.பி.எல். தொடரில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை முழுமையாக மாற்றி அமைக்கப்படும் என்று அந்த அணியின் தலைமை செயல் அதிகாரி காசி. விஸ்வநாதன் தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல்லில் பங்கேற்ற அனைத்துத் தொடர்களிலும் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி பிளே ஒவ் சுற்றுக்கு தகுதி பெற்றுது. ஆனால், இம்முறை தொடரில் லீக் சுற்றுடன் சென்னை வெளியேறுகிறது.

இந்தத் தோல்விக்கு டோனி தலைமையிலான மூத்த வீரர்கள் திறமைக்கேற்ப விளையாடவில்லை என்பதே காரணம் என்று கடுமையாக விமர்சிக்கப்பட்டது.

இது தொடர்பில் இந்திய ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்ட அந்த அணியின் தலைமை செயல் அதிகாரி காசி. விஸ்வநாதன் கூறுகையில், 2021 ஐ.பி.எல். தொடரிலும் சென்னை அணியை டோனி வழிநடத்துவார் என நான் நிச்சயமாக நம்புகிறேன். எங்களுக்கு மூன்று ஐ.பி.எல். கிண்ணங்களை அவர் வென்று தந்திருக்கிறார்.

எந்த அணியும் செய்யாத சாதனையாக அனைத்து ஐ.பி.எல். தொடர்களிலும் பிளே ஒவ் சுற்றுக்கு இதுவரை தகுதி பெற்றுள்ளோம். ஒரு மோசமான ஆண்டு அமைந்துவிட்டால், நாம் அனைத்தையும் மாற்ற வேண்டும் என்று அர்த்தம் இல்லை. எங்கள் திறமைக்கு தகுந்தபடி நடப்பு தொடரில் நாங்கள் விளையாடவில்லை. சுரேஷ் ரெய்னா, ஹர்பஜன்சிங் விலகியதும் அணிக்கு பின்னடைவை ஏற்படுத்தியது” -என்றார். (ஐ)

DREAM11 IPL

## இன்றைய ஆட்டம்

மும்பை இந்தியன்ஸ் எதிர் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ்

**மைதானம் : அபுதாபி**

நேரம் : இரவு 7.30 (இலங்கை)

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

DAN தமிழ் ஒளி

**காலை**

6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்



7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருமதி கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ்அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்



7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ
குடும்ப திட்டமிடல் தொடர்பாக

**பகல்**

12.00 மணி : சிரிக்கலாம் வாங்க
1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்
திரைப்படங்களின் காட்சிகள்




4.30 மணி : டேக் இட் ஈசி
5.00 மணி : அந்த நாலு பேர்
5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : டொப் 10 மூவீஸ்

**இரவு**

7.00 மணி : கொஃபி வித் பிரமுகர்
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்
10.00 மணி : யாவரும் கேளீர்

DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன்
வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

DAN இசை

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை

**இரவு**

7.00 மணி : ஓய்வெடு நிலவே
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - கணிதம்
6.00 மணி : தரம் 07 - கணிதம்
6.45 மணி : தரம் 08 - விஞ்ஞானம்
7.30 மணி : தரம் 09 - விஞ்ஞானம்
8.15 மணி : தரம் 10 - தமிழ்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
அரசியல் விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம்
(வணிகப்பிரிவு) கணக்கீடு
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**

12.00 மணி : தரம் 10 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 09 - கணிதம்
2.00 மணி : தரம் 06 - ஆங்கிலம்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் தமிழ்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் கத்தோலிக்கம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் ஆங்கிலம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் கணிதம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் வர்த்தகம்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் வரலாறு

**இரவு**

7.00 மணி : க.பொ.த உயர்தரம் கலைப்பிரிவு
மாதிரி வினாத்தாள்

ஓம் ரிவி

**காலை**

5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : சின்மய சிந்தனை
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா - 01
10.00 புதியதோர் தொடக்கம்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா - 02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : அருளுரை
7.30 மணி : திருவாசகம்
08.00 மணி : திருவிழா - 01

CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : ஆலயப் பாடல்கள்
9.00 மணி : ஜெபமாலை
10.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி : புனித சூசையப்பர் மன்றாட்டு
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**

12.00 மணி : திருகோணமலைத்திருப்பலி
1.00 மணி : மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி : நற்சிந்தனை
3.00 மணி : பாடல்
4.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
4.30 மணி : திருகோணமலை திருப்பலி

Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு
8.30 மணி : மனதோடு பேசலாம்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிரைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 28.10.2020 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.